விளம்பர விதிதங்களுக்கு :
மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்
பெரியதெரு,
யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு எழுதுக.

சத்தியவேத பாதுகாவலன்

சந்தா விபரம்
வருடசந்தா
இலங்கை ரூபா 5-50
வெளிநாடுகள் ,, 6-50

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA.
1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.
Telephone : No. 300
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு ஆனி மாதம் 23-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 24-ம் இலக்கம்

ஆஸ்பத்திரியிலே பிரித்தானிய தூதுவரை அருளப்ப பாப்பரசர் சந்திக்கின்றார்

பரிசுத்தஸ்தானத்தினிடமாய் இருந்துவருகின்ற பிரித்தானிய அரசின் இராசியதூதுவரான சேர் மார்க்குஸ் செகி அவர்கள் ரோமைநகரின் சுற்றுடலிலுள்ள சனற்றிக்ஸ் ஆஸ்பத்திரியிலே அபாயகரமான நோய்கண்டு வருந்துகிறார். பாப்பரசர் இதை அறியவந்ததும் அங்கு சென்று அவரைச்சந்தித்து, அவருடைய படுக்கையண்டை 15நிமிஷங்கள் வரை செலவிடலாயினர். இருவரும் பிரான்ஸியபாஷையிலே சம்பாஷித்தனர். பிறநாடுஒன்றின் இராசியதூதுவர்ஒருவரைத் தரிசிப்பதற்காகப் பாப்பரசர்ஒருவர் வத்திக்கானைவிட்டு வெளிகொண்டமையானது சமீபகாலசரித்திரத்தில் மிகஅபூர்வமானதொன்றாகும். ஆயினும், அருளப்பபாப்பரசர் தமதுநோய்வாய்ப்பட்ட நண்பர்களை அவர்கள் படுக்கையண்டைசென்று அநேகமுறை சந்தித்திருக்கின்றார். சேர்மார்க்குஸ் செகிஅவர்கள் ஒருபுரொட்டஸ்தாந்தர். 1959-ம் ஆண்டுமுதல் வத்திக்கானிலே இருந்துவருகின்றார் தமது வசிகரபோக்கையும், தீவிரபுத்தியையுமிட்டு ரோமைநகரிலே பிரஸ்தாபம் பெற்றவர். பரிசுத்தஸ்தானத்தினிடமாக நியமனஞ்செய்யப் பெற்றுள்ள இராசிய தூதுவர்களிலே அதிகம்வெற்றிகரமாகத் தங்கள் கடமையைப் பார்த்து வெகுவாக மதிக்கப்படுகிறவர்களில்ஒருவர். பெரிதும் அங்கலாய்ப்பும் அதிகவேதனையும் தருவதான ஒருசந்தர்ப்பத்திலே பாப்பரசரின் தரிசனையானது அவருக்கு எத்துணைபெரும்ஆறுதலும், சந்தோஷமும் உண்டுபண்ணியிருக்குமென்று எவருமே நிதானித்தறியலாம்.

மிஷன்நாடுகளுக்கு 80 லட்சம் பவுண்

மிஷன்களென அறியப்படுகின்ற புதுவேதநாடுகளுக்கெனச் சென்றவருடம் கத்தோலிக்க உலகம்முழுவதிலும் ஏறக்குறைய 80லட்சம்பவுண் சேகரிக்கப்படலாயிற்று. இத்தொகை முந்தியவருடத்திலும் ஏறக்குறைய 8லட்சம்பவுணால் அதிகரித்துள்ளது. இந்தப்பணம் 700மிஷன்நாடுகள், 430மிஷன்குருமடங்களுக்குப் பகிர்ந்துகொடுக்கப்படும். சென்றவருடம் கூடியதொகையான பணம்உதவியநாடுகளில் ஜேர்மனி, ஒல்லாந்து, இத்தாலி, ஐக்கியஅமெரிக்கதேசம் என்பன அடங்கும்.

கருதிலைலாண்டவரும் லுத்தேர்சபை மேற்றிராணியாரும்

ஜேர்மனியிலே பேர்ளின்நகரின் லுத்தேர்சபை மேற்றிராணியாரான கனம். ஒட்ரோ டிபெலியஸ் அவர்கள் சென்றமாதம் தம்முடைய 80-வதுவருட பிறந்தபெருநாளைக் கொண்டாடிய போது, அங்கரின் கத்தோலிக்கமேற்றிராணியாரான கருதினல்டொப்வ்னர்ஆண்டவர் அவரைச்சந்தித்துப் பிறந்தபெருநாள் வாழ்த்துக் கூறலாயினர். யுத்தம்முடிந்ததுமுதல் கத்தோலிக்கரான தங்கள் உடன் தேசத்தவர்களுக்கு லுத்தேர்சபைப் புறொட்டஸ்தாந்தர்கள்செய்துள்ள சகோதரத்துவஉதவிகளைப் பாராட்டுமுகமாகவே கருதினல்ஆண்டவரின் இந்தத்தரிசனை அருளப்படலாயிற்று. கத்தோலிக்ககோவில்கள் குறைவாயிருக்கும்காரணமாகத் திவ்வியபூசைக்கு லுத்தேர்சபைக் கோவில்கள் விட்டுக்கொடுக்கப்பட்டன. மகாநாடுகளுக்கென்று போர்ளின்நகர் செல்லுகின்ற கத்தோலிக்கருக்கு அங்கரிலுள்ள புறொட்டஸ்தாந்தர்கள் தங்கள் இல்லங்களிலே உறைவிடம் அளித்துவந்தார்கள். இரண்டொருவாரங்களின்முன் கனம். டெபிலியஸ்மேற்றிராணியார் பரிஸ்நகர் சென்றிருந்தபோது அங்கர் அதிமேற்றிராணியாரான கருதினல்பெல்தின்ஆண்டவரைச்சந்தித்து, அவருடன் சம்பாஷித்திருந்தார்.

சர்வதேச சற்பிரசாத மகாநாடு

மூனிச்நகரிலே அடுத்துநிகழும் ஆடிமாதம்31-ந்திகதி ஆரம்பமாகவிருக்கும் சர்வதேசசற்பிரசாதமகாநாட்டிற்கென்று ஜேர்மனியிலுள்ள சங்கியாசர், கன்னியாஸ்திரிமாராலும், சாதாரணகத்தோலிக்கராலும் சுமார் 15,000பூசைவஸ்திரங்களும், பீடவஸ்திரங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. 600பூசைப்பாத்திரங்கள், தட்டுகள், மெழுகுவர்த்தித் தண்டுகளுடன் சேர்த்து வழங்கப்பட்டுள்ள இந்தவஸ்திரங்கள் மூனிச்நகர் உதவிமேற்றிராணியாரும், மகாநாட்டின் பிரதமகாரியதரிசியுமான நியூகோஸ்லர் ஆண்டவரது வேண்டுகோளின்பேரிலே கொடுபட்டுள்ளன. மகாநாடுமுடிந்ததும் இவைகள் மிஷன்நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

பாப்பரசரைக் காவல்பண்ணும் சுவிஸ்காவலர்

பாப்பரசரைக் காவல்பண்ணுகின்ற வத்திக்கானின் உலகப்பிரசித்திபெற்ற சுவிஸ்காவலர்படைதனது455-ம்ஆண்டிலே சமீபத்தில் பிரவேசிக்கலாயிற்று. இந்தக்காவற்படை 1506-ம்ஆண்டின் தொடக்கத்திலே அடியிடப்பட்டது. இப்படையைச் சேர்ந்தவர்கள்தொகை 133பேரிலிருந்து 100பேராகக் குறைக்கப்பட்டுப் பாப்பரசரால் சென்றஆண்டு வைகாசிமாதம் அங்கீகரிக்கப்பெற்ற புதியஒழுங்குகளின்படி அதுஇயங்கிவருகின்றது. இவர்கள் வருடம்ஒருமுறை வைகாசிமாதம்6-ந்திகதியன்று விசுவாசப்பிரமாணம் செய்துகொள்ளுகின்றனர். அன்றுதினமே அப்படையில் புதிதாகச்சேர்க்கப்பட்டவர்களும் விசுவாசப்பிரமாணஞ் செய்கின்றனர். இந்தத்திகதி சரித்திரபூர்வமானது. 1527-ம் ஆண்டு வைகாசிமாதம்6-ந்திகதியன்றுதான் 7-வது கிளமேந்து பாப்பானவரை வீரத்துவமாகநின்று பாதுகாப்பதில் 147சுவிஸ்காவலர் அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய சதுக்கத்தில் 5-வதுசார்ள்ஸ் சக்கிரவர்த்தியின் ஆயிரக்கணக்கான படைவீரர்களை ஆறுமணித்தியாலங்களாக எதிர்த்துக் கடைசிஆள்வரை போராடித் தங்கள் உயிரைத் தியாகஞ்செய்தனர். பாரம்பரியமாகச் சுவிஸ்காவலர் சுவிற்சர்லாந்திலே ஒருசிறியபகுதியிலிருந்து தெரிந்தெடுக்கப்படுகின்றனர். சமீபத்திலே சுவிஸ்காவலராகப் புதிதாய்த்தெரிவுசெய்யப்பட்ட 24பேர் சென்றவைகாசிமாதம் 6-ந்திகதியன்று விசுவாசப்பிரமாணஞ் செய்து சேவையில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

போர்மோஸாவின் கத்தோலிக்க சர்வகலாசாலை

சுதந்திரசீனாவின் தலையிடமாகிய போர்மோஸாதீவில் பியுஜென்கத்தோலிக்கசர்வகலாசாலையை அமைப்பதற்கான ஆயத்தங்கள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன. இச்சர்வகலாசாலையின் அதிபராக போல்யு. பின்என்ற சீன அதிமேற்றிராணியாரைப் பரிசுத்தஸ்தானம் நியமித்திருக்கிறது. சீனதேசபீக்கிங்நகரில் முன்னர்இருந்துவந்து கம்யூனிஸ்தர்களால் பொதுப்பாவனைக்கென்று அபகரிக்கப்பட்ட பியுஜென் கத்தோலிக்கசர்வகலாசாலையின் கல்விப்பணியையே இதுதொடர்ந்துநடத்தும். அருளப்பபாப்பரசர் 1,00,000டலர் நிதிவழங்கி இதனை அமைக்கும்வேலையை ஆரம்பித்துவிட்டிருக்கின்றார். மேலும்அதற்

[தொடர்ச்சி 5-ம் பக்கம்]

இரண்டாவது வத்திக்கான் சங்கம்

திருச்சபைப் பொதுச்சங்கம்— அதாவது இரண்டாவதுவத்திக்கான்சங்கம் இன்னும் ஒருவருடகாலத்தில் — 1961-ம்ஆண்டின் வைகாசிமாதத்தில் ஆரம்பமாகுமென்று அருளப்பபாப்பரசர் அன்றுதெரிவித்திருக்கின்றார். இச்சங்கம் 1962 — அல்லது 1963-ம்ஆண்டுவரை கூடமாட்டாதென்று சமீபத்தில்தானே கருதப்பட்டது. ஆயத்தகம்மிற்றிகளின் அங்கத்தவர்கள் உலகமுழுவதிலுமிருந்தே தெரியப்பட்டு, அதனல்சங்கம் உண்மையான பொதுத்தன்மையைக் கொடுப்பதாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வெள்ளிவிழா

காவலூர், அர்ச். அந்தோனியார் கோவிலைச் சேர்ந்தவரும், தற்பொழுது கொட்டாஞ்சேனை, மேமீல்ட்வீதியில் வசிப்பவருமான ஏ. ஜே. தம்பிநாயகம் தம்பதிகள் இம்மதி 8-ந்திகதியன்று தமது திருமண இருபத்தைந்தாவது ஆண்டுநிறைவு வெள்ளிவிழாவைக் கொண்டாடினர். அன்று மருதமடுத் திருப்பதியில் வண. எம். ஜே. மரியாம்பிள்ளை சுவாமியவர்கள் நிறைவேற்றிய பாடற்பூசைக்கு விழாநாயகர்கள் சமூகமளித்துத் திருவிருந்தருந்தி நற்கருணை ஆசிவேளை பாடப்பெற்ற தேவதோத்திர "தெதேயும்" எனும் கீதமூலம் நன்றிசெலுத்தினர்கள்.

—நிருபர்.

கண்டோம் களிகூர்ந்தோம்

வைகாசி13-ம்நாள்அதிகாலை வற்றாப்பளை ஸ்ரீ துர்காநாயகியின் திருக்கெபியண்டை குழுமியிருந்த மாணவர்குழாமும், ஆசிரியர்களும் "ஆவேமரியா" என்ற அன்னையின் இனியகீதத்தை இன்பமாகப்படித்துக்கொண்டு பாடசாலையைவிட்டு வெளிக்கிளம்பிச்சென்ற மோட்டர்இரதம் (வான்) மின்னல் வேகத்தில் வவுனியாவைத்தாண்டி அனுராதபுரியை அடைந்தது.

பின்னர் அங்கிருந்துபுறப்பட்டுப்புத்த மதத்தினரின் புனிததலமான மிகுந்தலை அடிவாரத்தில்போய் நின்றதும், நாமெல்லாம் உணர்ச்சிவசப்பட்டு இரதத்தினின்றும்இறங்கிப் படிகளில்ஏறினோம். தேவநம்பியதீசனால் அமைக்கப்பட்ட அதிசயசிருஷ்டிப்புகளைக் கண்ணுற்றுமகிழ்ந்ததில் நேரம்போனதே தெரியவில்லை. அதன்மேல் அனுராதபுரத்தைச் சேர்ந்தபோது, அங்கே அப்போது தலைநிமிர்ந்துநின்ற கட்டடங்கள் இப்போது அழிந்துகிடக்கக் கண்டோம். அபயகிரிவிகாரை, �றுவான்வெலிசய, இசுறுமுனிவிகாரை, ஆயிரங்கால் மண்டபம், வெள்ளரசுமுதலியன எங்கள்கண்ணுக்கு விருந்தாகின. அங்கே நுவரைவீவாவின் அழுக்குநீர் எவ்வாறு சுத்தஞ்செய்து நகரமக்களுக்கு நன்னீராக வழங்கப்படுகிறது என்பதை விளக்கிவைத்தார் ஒருபெரியார். பின்னர் புனிதவளனர் கல்லூரி சென்று அன்றையஇரவை அங்கே கழித்தோம்.

மறுநாட்காலைகாசியப்பனின் இராசதானியாம் சிகிரியாவை நோக்கிச் சென்று, விண்ணளந்துகாட்டும் மலைகளையும், பண்ணிசைக்கும் சிற்ருறுகளையும், ஒங்கிவளர்ந்த கானகங்களையும்கடந்து சிகிரியாக்குன்றின் அடிவாரத்தை அடைந்தோம். அதன் சிகரத்தில்ஏறி அங்குநின்று இயற்கைஅன்னையின் காட்சிகளைக்கண்டோம். சிகிரியாவின் இயற்கைஅழகிற்கு அழகு செய்வனவாய் அமைந்திருந்த ஓவியங்களைக்கண்டு உவகையுற்றோம். அப்போது வருணபகவானால் பாதிக்கப்பட்டநாங்கள் தம்பனையில் தஞ்சம்புகுந்தோம். அங்கு சித்தார்த்தரின் பொற்சிலைகளையும், கற்சிலைகளையும், கலைநுட்பங்களையும்கண்டு வியந்தோம். மலையைக்குடைந்துள்ள மாண்பையும், ஓவியங்களின் மாட்சியையும், ஒளிவிடும் முறை ஆதியவற்றையெல்லாம் கண்டு களித்தோம்.

பின்னர் ஈழத்தின் பெருமையை விளக்கிக்கொண்டிருக்கும் கண்டிமாநகரைஅடைந்து, புத்தரின்தந்தம்இருந்துவரும் தாலதமாளிகையையும், நூதனசாலையையும், பிரசித்திபெற்ற கண்டிமாநகரின் போகாம்பவாவியையும் பார்த்தோம். வந்தாரை மயங்கவைக்கும் பேராதனைப் பூங்காவையும் நாம் பார்க்காதுவிடவில்லை. பூங்காவை வளர்த்தோடும் வற்ருதநதியாம் மகாவலிகங்கையின் மாட்சியையும், அந்நதியிலே தொங்குகின்றபாலத்தின்காட்சியையும் கண்டோம், களிகூர்ந்தோம். மூன்றுநாள் பிரயாணத்தின்பின் வைகாசி 16-ம்நாள் குதூகலத்துடன் எமதுசுயபதி வந்துசேர்ந்தோம்.

செல்வி காமல் இக்னேஷஸ்.

மட்டக்களப்பு புளியந்தீவுத் தபால்

வணக்கமாத முடிவு: எமதுபங்குத்தேவாலயத்திலே மாதாவின்வணக்கமாதம் வழமைபோலச் சிறப்பாய்க் கொண்டாடப்படலாயிற்று. முதல்நாளன்று இயற்கைமலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த அழகியபீடத்தில் மாதாவின்திருச்சுரூபம் எழுந்தேற்றம் பணிவைக்கப்படவே, தினமும் விசுவாசிகள் தனித்தனியாகவும், கூட்டங்கூட்டமாகவுஞ்சென்று செபமாலை செபித்தவண்ணம் இருந்தார்கள். இதுதவிர அப்பீடத்திலே தினமும்காலையில் திவ்வியபூசையும், மாலையில் செபமாலை, பாட்டுப்பிரார்த்தனை, பிரசங்கம், தேவநற்கருணை ஆசீர்வாதத்துடன் கூடிய வணக்கமாதப் பத்திமுயற்சியும் நடைபெற்றுவரலாயின.

கடைசித்தினமான வைகாசி 31-ம்நாள் வேஸ்பர்ஆராதனையை வண.குருஸ்சுவாமிகள் நடத்திவைத்தார். அடுத்து மாதாவின் வணக்கமாதம் முடிவுபெறுவதைமுன்னிட்டு ஜூனி 1-ந்திகதியன்று மாலை 5மணிக்கு ஆலயம் பக்தர்களால் நிரம்பிவழிந்துகொண்டிருக்கப் புதன் கிழமையாகையால் சதாசகாயமாதா நோவனைமுடிவுற்றதும் அனைவரும் எரியும்மெழுகுவர்த்திகளையும், மாதாவின் பக்திச்சபையார் விருதுக்கொடிகளையும் ஏந்திநிற்க, முதலில் பாடசாலைச் சிறுவர்மிருமிகளும், அதன்பின்பெண்களும், அடுத்து ஆண்களும் இருவரிசையாகச் செபமாலை செபித்தவண்ணம்செல்லச் சுற்றுப்பிரகாரம் ஆரம்பமாயிற்று. பூசைப்பரிசாரகர்களின் இருவரிசைகளுக்கிடையே இயற்கை, செயற்கை மலர்களாலும், மின்சீபங்களாலும் அலங்கரித்திருந்த இரதத்திலே தேவதாயாரின் திருச்சுரூபம் எழுந்தருளிச்செல்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது.

இரதத்தில்பூட்டிய ஒலிபெருக்கிமூலம் வண. குருஸ்சுவாமிகள் செபமாலையைத் தொடக்கினர். காரணிக்கங்களிடையே மாதாவைப்புகழ்ந்து இனியபாக்கள் படிக்கப்பட்டன. ஈற்றில்பவனி ஆலயத்தைஅடைந்ததும், வண. நோபேட்சுவாமியவர்கள் "செபமாலை ஓர் ஆயுதம்" என்றதுபற்றிச் சிறந்தஒருபிரசங்கம் செய்தார். அதன்மேல் விக்கார்ஜெனறல் அதிவண. ஜெரோம் டீசாசுவாமிகள் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளினர். ஈற்றில் பாத்திமாநாயகியின் திருச்சுரூப ஆசீர்வாதத்துடன் எமது பங்கில் தேவஅன்னையின் வணக்கமாதம் சிறப்பாக முடிவடைந்தது.

செல்வி காமல் இக்னேஷஸ்.

அமலோற்பவ மரியாயகியின் ஐக்கிய செபக்கூடம்

"இற்றைக்கு 43ஆண்டுகளுக்குமுன்—அதாவது 1917-ம்ஆண்டு பாதகுலக்கிறீஸ்தவர்களால் ஜிந்துப்பிட்டிவீதியிலே வாணியன்தோட்டத்தில் ஒருசிறியகுடிசையிலே "அர்ச். அமலோற்பவமரியாயகியின் ஐக்கிய செபக்கூடம்" ஸ்தாபகமானது. இது அநேககஷ்டங்களிடையேவளர்ந்து, வளம்பெற்று, மங்காமல் மறையாமல் பணிபுரிந்துவருவதைக்கண்டு கிறீஸ்தவசமுதாயம் பெருமைகொள்ளாதிருக்க முடியாது."

கொழும்பு, ஜெம்பட்டாதெரு 77/33-இல் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட பிரஸ்தாப செபக்கூடத்தில் நடைபெற்ற 43-வதுஆண்டு விழாக்கூட்டத்தில் திரு. பிரான்சீஸ்சேவியர் பர்னாந்து மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும்கூறியதாவது: "காலஞ்சென்ற வித்துவான் தொ. சவிரிமுத்துபர்னாந்துஅவர்களின் உழைப்பினாலேயே இச்செபக்கூடம் உருவாயது. இவர் சிறுவர், சிறுமியர்களுக்கென இராப்பாடசாலையொன்றை ஆரம்பித்தார். வயதுவந்தவர்களுக்கு ஒருசிலமணிநேரங்களை ஒதுக்கி, விசேஷமுறையில் கல்விபுகட்டினர். வித்துவானின்முயற்சிக்கு ஊக்கமும், ஆக்கமும்கொடுத்து உறுதுணைபுரிந்துவந்த காலஞ்சென்ற திரு. எஸ். சந்தனப்பர்னாந்துஅவர்களை இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூராமல் இருக்கமுடியாது."

அடுத்தபடியாக வைகாசிமாதக் கொண்டாட்டம் முடிந்தபின் மரியாயகியின்போல் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்குவது வழக்கமாதலால் ஆனிமாதம் 18-ந்திகதி இச்சேவையைச்செய்யச் சபைமுடிவுசெய்தது. இந்தக் கைங்கரியத்தை முயற்சியோடு செய்துவரும். திரு. எஸ். எல். எம். பங்கிராஸ்பர்னாந்துஅவர்களின் சேவையைப் பலர்புகழ்ந்து பேசினர்கள்.

சி. எல். எம். பி. பர்னாந்து.

வவுனியாத் தபால்

வவுனியா, இறம்பைக்குளப்பதியிலே கோவில்கொண்டிருக்கும் அர்ச். அந்தோனியார் திருநாளின் நவதினஉற்சவம் 2-6-60வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தினமும் காலை திவ்வியபூசையுடனும், மாலை செபமாலை, பிரசங்கம், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்துடனும் நிறைவாகி வந்தது. ஆலயம் மின்சாரதீபங்களாலும், மலர்மாலைகளாலும் அழகுறச் சிங்காரிக்கப் பட்டிருந்தது.

திருநாளுக்கு முதல்நாளாகிய 12-ந்திகதி ஞாயிறுவாரம் மாலை4-30 மணிக்கு வவுனியா, இளமருதங்குளம், சேமமடு, பெரியகோமரசங்குளம், இராசேந்திரங்குளம், பாவற்குளம், பாத்திமாகிரி, பறநட்டகல்முதலாம் இடங்களிலிருந்து பெருந்திரளானோர் கூடியிருந்தசமூகத்தில் திவ்வியநற்கருணை எழுந்தேற்றஞ்செய்யப்பட்டு வண. எஸ். சூசைநாதர் சுவாமியவர்களால் காரணிக்கவிளக்கப் பிரசங்கத்துடன் திருமணிஆராதனை நடைபெறலாயிற்று.

பின்னர் திருச்சிலுவை முன்செல்ல, பள்ளிச்சிறுரும், பத்திக்கூட்டங்களைச் சேர்ந்தோரும் பின்செல்ல, மற்றும்விசுவாசிகள் செபங்கள் செய்துவர, பாடகர்குழாம் இனியகீதங்களைப் பாடிவர, சங். கன்னியாஸ்திரிமாரும், பரிசாரகர்கூட்டமும் அணிவகுத்துவர, வண. எஸ். சூசைநாதர்குரவர் துணைபுரிய, எமதுகட்டளைக்குரவர் வண. ஜோன் சிங்காயர்சுவாமியவர்கள் நற்கருணைஆதரைக் கரத்தேந்த அலங்கரிக்கப்பட்டிருந்த வீதியூடே சுற்றுப்பிரகாரம்ஆரம்பமாகி வழியிலே இரு இடங்களில முறையேமரியாயின் சேனையாளரும், கத்தோலிக்கஐக்கியசங்கத்தினரும் அமைக்கப்பட்டிருந்த இருபந்தர்களில் ஆசீர்வாதம்அருளப்பட்டது.

ஈற்றிலே, கோவில்முன்றலில் மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த லூர்துஅன்னையின் கெபிப்பீடத்தில் நற்கருணைஆதரை எழுந்தருளச்செய்து மாலைஆராதனை பாடித் திவ்வியநற்கருணைஆசீர்வாதம் அருளப்பட்டது. 13-ந்திகதி திங்கட்கிழமைகாலை 7மணிக்குத் திருநாட்பாடற்பூசை நிறைவேறியபின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடைபெற்றுத் திருச்சுரூபஆசீர்வாதத்துடன் திருநாள் நிறைவாயிற்று.

— ஜே. எஸ்.

விஞ்ஞான, சித்திர, கைவேலைக் கண்காட்சி

அனுராதபுரம், அர்ச். சூசையப்பர் கல்லூரி ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் கூட்டாக அமைக்கப்பட்ட விஞ்ஞான, சித்திர, கைவேலைக்கண்காட்சி இம்மதி12-ம்திகதிமாலை 6-30 மணியளவில் நகரவிசேஷஆணையாளர் திரு. கே. பி. திசனயக்காஅவர்களால் திறந்துவைக்கப்பட்டது. கல்லூரி முதல்வர் வண. எம். ஜே. மரியாம்பிள்ளைசுவாமியவர்கள் கண்காட்சித்திறப்பாளரையும், பொதுமக்களையும் வரவேற்றார். கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் விசேஷஆணையாளர் கூறியதாவது:

எனது நாளாந்தகடமைகளில் அதிகமான நேரத்தைச் செலவிடவேண்டியிருக்கும் பொழுதிலும் இவைபோன்றவைபவங்களிலே பங்குபற்றுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேனைக் கூறிக் கடந்தபலவருடங்களாகக் கத்தோலிக்ககுருமார் இந்நாட்டின் கல்விவளர்ச்சிக்காகச் செய்துவரும் சேவையைப் பெரிதும்பாராட்டினர். குறிப்பாக வடமத்தியமாகாணமக்களின் கல்விவிருத்திக்காக அர்ச். சூசையப்பர்கல்லூரிப் பொறுப்பாளர் செய்திருக்கும்நன்மை எவராலும் மறக்கக்கூடியதல்ல.

அவர் மேலும்பேசுகையில் கூறியதாவது: இக்கண்காட்சி நமதுஇளைஞர்கள் விஞ்ஞானத்துறையிலும், மற்றும் கலைத்துறைகளிலும் அடைந்திருக்கும் முன்னேற்றத்திற்கு ஓர்சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. கல்லூரி மாணவர்கள் மாத்திரமல்ல, ஏனைய பொதுமக்களும் இக்காட்சியின்மூலம் பயனடைவார்கள்என நம்புகின்றேன்.

கண்காட்சியை ஆயிரக்கணக்கானசிறியோரும், பெரியோரும் பார்வையிட்டு அகமகிழ்ந்தார்கள். கண்காட்சி மூன்றுநாட்களாகத் தொடர்ந்துநடைபெற்றுப் 14-ம்திகதியுடன் முடிவடைந்தது.

— நிருபர்

மஸ்கோகரில் ஒன்பது தினங்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யோர் எவ்விதமோ அடிக்கடி மறைந்துவிடுகின்றனர். இளைஞர்கள்மட்டுமே உற்சாகமும், ஆர்வமுமுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். நான்கண்டவற்றிலிருந்து இவ்விளைஞர்கள் வளர, வளரத் தாங்கள் ஒருதருணத்தில் சொர்க்கமெனக்கருதியமுறைகளின் பயங்கரத்தை நன்குவிளங்கிக் கொள்வார்கள். அத்தருணத்தில் அவர்கள் தங்கள்அதிருப்தியை வெளிக்காட்ட மீண்டும் தங்கள்முதியோரின் கதியை அடைவர். இவ்விதநிலையை — அதாவதுஅதிருப்தியை வெளிக்காட்டுதல் ஊழிக்கால வஞ்சகசிறைவாசத்தை அளிக்கக்கூடுமென்ற உண்மையை நன்குணர்ந்தவர்களோ எப்போதும் மௌனமாகவேயிருப்பர். ஆம், அவர்கள் செய்யக்கூடியது வேறெதுவுமுண்டா?

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூத்துக்குடியில் தேம்பாவணி மாநாடு
மே 10-ம் நாள் நிகழ்ச்சி

மே 10-ம் நாள் காலை வண. பிரான்சிஸ் மூராய்ஸ் அடிகளார், எம். ஏ., எம். லிட். அவர்களது தலைமையில் நடைபெற்றது. "அரசியலில் உரோமையர் கிரேக்கரை மேற்கொண்டாலும், இலக்கியத்தில் கிரேக்கர் உரோமையரை வென்றனர் என்பது வரலாற்று உண்மை. ஆங்கில இலக்கியம் 16-ம் நூற்றாண்டில் இருந்து 19-ம் நூற்றாண்டுவரை முறையே இத்தாலி, பிரெஞ்சு, செர்மானிய இலக்கியங்களைப் பொருளிலும், இலக்கிய நடையிலும் பின்பற்றியுள்ளது. தமிழ்நாடு போந்த ஐரோப்பியரது செல்வாக்கை நமதுமொழியில் முதனமுதல்காண்பது தமிழ் உரைநடையைச் செப்பனிடுவதிலேயே. பண்டைய உரையாசிரியர்கள் உரைநடைக்குக் கருக்கட்டினர்கள். இக்காலநிலைக்கு அதனை உருப்படுத்திய நிலைமை ஐரோப்பிய வேதபோதகர்களைப் பெரும்பாலும்சாரும். அவருள் வீரமாமுனிவர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். மணிப்பிரவாள நடையை நீக்கித் தனித்தமிழ் நடையைப் பயன்படுத்திப் புதுச்சொற்களை உருவாக்கித் தமிழ்மரபுத் தொடர்களையும், சொற்றொடர்களையும் கையாண்டு முனிவர் ஆக்கிய உரைநூல்கள் அவரை மறுமலர்ச்சியின் தந்தை எனத் தெளிவாகக் காட்டுகின்றது" என்றுகூறி முனிவரது சமயப் பணியையும், இலக்கியப் பணியையும் குறிப்பிட்டார்.

இதன்பின்பு பு. இராசதுரை, எம். ஏ. அவர்கள் காவிய நலம் என்னும் பொருள்பற்றிப் பேசினர். தேம்பாவணியில் அமைந்துள்ள காவிய நலங்களையும், திருக்குறள், சீவகசிந்தாமணி, இராமாயணம்முதலிய நூல்களிலுள்ள சொற்களையும், பொருள்களையும் முனிவர் கையாண்டுள்ளவகையையும் குறிப்பிட்டுத் தேம்பாவணி நடை சீவகசிந்தாமணியிலுள்ள நடையை ஒக்கும் என விளக்கமாகக் கூறிமுடித்தார். பின்னர் திருமதி புளோரம்மாள் மூராய்ஸ், எம். ஏ. அவர்கள் வீரமாமுனிவரது நூல்களின் சிறப்பைப்பற்றிப் பேசினர். பயணத்திற்கு வசதியில்லாத அக்காலத்தில் வீரமாமுனிவர் இந்நாட்டின் பல்வேறு இடங்களில் சமயப்பணி புரிந்து, தம் பன்மொழிப்புலமையால் தமிழ் இலக்கியங்களைக் கசடறக் கற்றுப் பல்வேறு துறைகளில் நூல்கள் யாத்து, பெருந் தமிழ்த்தொண்டு செய்தமுறையை விளக்கினர். இதன்பின் திரு. ரம்போலா மாஸ்கரேனஸ் அவர்கள் காப்பியத்தலைவர்கள் என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு ஆற்றினர். காப்பியத் தலைவரிடத்துக் கொண்ட ஈடுபாடு காரணமாகவே காப்பியக்கவிஞர்கள் காப்பியம் எழுதுகிறார்கள். முனிவரது காப்பியத் தலைவனுக்கிய சூசை பிறப்பாலும், குலச்சிறப்பாலும், வியத்தகு செயல்திறத்தாலும், இறைவனிடமிருந்து பெற்ற வரங்களாலும், அறிவின்திறத்தாலும் மிகச்சிறந்தவன் என்பதைக் காப்பியத்திலிருந்து பலஅரிய எடுத்துக்காட்டுக்களைத்தந்து விளக்கினர். வித்துவான் ஆரோக்கியம்பிள்ளை அவர்கள் நன்றிகூறக் காலை நிகழ்ச்சி இனிதுமுடிந்தது.

மாலை நிகழ்ச்சி மேன்மைதங்கிய தோமஸ் ஆண்டகையவர்கள் தலைமை உரையின்பின் வித்துவான் பொனிபாஸ் அவர்கள் தேம்பாவணி ஆசிரியர் என்னும் பொருள்பற்றிப் பேசினர். வீரமாமுனிவர் இந்நாட்டுக்குவந்த சூழ்நிலையைவிளக்கி, முனிவர் தமிழருள்தமிழராய்வாழ்ந்து ஆற்றிய சமயப்பணியையும், தமிழ்த்தொண்டையும், இயற்றிய நூல்களையும், நிறுவிய கோயில்களையும், பட்டஇன்னல்களையும், பெருமக்களால் மதிக்கப்பட்ட வரலாற்றையும், முனிவரது நாட்டுப்பற்றையும், தமிழ்ப்பற்றையும் மிக அருமையாக விளக்கினர். இதன்பின் திரு. வி. மரிய அந்தோணி அவர்கள் தமக்கேஉரிய நகைச்சுவையும் எளிய இனிய நடையிலே தேம்பாவணியில் குடும்பவாழ்க்கை எனும் பொருள்பற்றிப் பேசினர். சூசையப்பரும், மரியாளும் குடும்பவாழ்க்கைநடத்திய மாண்பினை எடுத்துரைத்து, மக்களுக்குக் குடும்பவாழ்க்கையில் ஏற்படும் பல சிக்கல்களையும், அவற்றை நீக்கும் முறையையும் மிக அருமையாக விளக்கி எல்லோரையும் மகிழ்வித்தார். அதன்பின் டக்டர் மு. ஆரோக்கியசாமி அவர்கள் தேம்பாவணியில் தத்துவக்கொள்கை எனும் பொருள்பற்றிப் பேசினர். தயிர்க்கடைதல் முதலிய நாட்டில் நடைபெறும் பலவகைக் காட்சிகளை முனிவர் எடுத்துரைத்து, அதில் கிறிஸ்துவ தத்துவங்களைப் புகுத்தியுள்ள முறையையும், தேம்பாவணியில் முனிவர் கடவுளின் இயல்பையும், ஆற்றலையும் விளக்கும் அரிய பகுதிகளையும் எடுத்துக்காட்டி, கடவுட்தத்துவங்களை விளக்கியபின்பு சூசை மரியின் வாழ்க்கையிலிருந்து இல்லறத்தின் தத்துவத்தை எடுத்துக்காட்டி, அச்சமும், மிடிமையைப் பொறுக்கும் மாண்பும் சூசையின் வாழ்க்கையில் விளங்கிய முறையையும் அழகாக எடுத்துக்காட்டினர். இவ்வுலக இன்பம் நமக்குஇருக்கவேண்டிய வானுலக சிந்தனையை மாற்றுவது தவறு. ஏனென்றால், அவ்வுலகின் முன் இவ்வுலகம் காணகம்போன்றது என்பதையும் தேம்பாவணியில் இருந்து பல எடுத்துக்காட்டுகளால் விளக்கினர். ஆண்டகையவர்கள் தமது முடிவுரையில் சொற்பொழிவாளர்களைப் பாராட்டித் தேம்பாவணிமாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றதற்கு மகிழ்ச்சி தெரிவித்து, அதனை நடத்திய மிக்கேல் சுவாமியவர்களையும், அன்னருக்குத் துணையாக இருந்த அனைவரையும் பாராட்டினர். பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ் அவர்கள் மாநாட்டின் தீர்மானங்களைப் படித்தார்.

தீர்மானங்கள் :

1. கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் தேம்பாவணியையும், முனிவரது பிற நூல்களையும் பாடமாகவைக்க ஏற்பாடு செய்ய அரசாங்கத்தை வேண்டிக் கொள்ளுகிறது.

2. ஆண்டுதோறும் தேம்பாவணி விழா நடைபெற இலக்கியத்தில் ஈடுபாடு உடையவர்கள் முயற்சி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் ஆண்டகையவர்கள் இலக்கியக் கழகம் வெளியிட்டுள்ள தேம்பாவணிச் சுருக்கம், அச்சில் இருந்துவரும் தேம்பாவணிமூலமும், குறிப்பும் அடங்கிய பதிப்பு, தேம்பாவணிச் சொற்பொழிவுகள் ஆகியவற்றை மக்கள் படித்துப் பயன்பெற வேண்டும் என்று ஆசி மொழிந்தார். பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ் நன்றிகூறியபின் மேற்படி பள்ளிமாணவர்களால் பரமார்த்த குரு கதையும், அரிய நடனங்களும் மிக அழகாக நடித்துக் காட்டப்பெற்றன.

தமிழ்இலக்கியக்கழகச் செயலாளர் அவர்கள் இன்னிசைப் புலவர் திரு. தோமஸ் விக்டர் அவர்களுக்கும், அவரோடு சேர்ந்து உழைத்த இன்னிசைக் குழுவினருக்கும், கலை நிகழ்ச்சிகளை மிக அருமையாக நடத்திய திரு. லடிஸ்மாஸ்கரேனஸ், திரு. வி. அருள்சாமி ஆகியவர்களுக்கும், மாநாடு சிறப்பாக நடப்பதற்குத் துணைபுரிந்த மற்றெல்லோருக்கும் நன்றிகூறினர்.

மஸ்கோநகரில் ஒன்பது தினங்கள்

அமெரிக்காவிலுள்ள பால்த்திமோர் அதிமேற்றிராசனத்தில் வெளியாகும் கதலிக் நிவ்யூ எனும் கத்தோலிக்க வாரம் பத்திரிகையின் ஆசிரியரான ஜெரூட்ஷெரி அவர்கள் அண்மையில் ஒன்பது தினங்களாக மஸ்கோவைப் பார்வையிட்டது பற்றி எழுதுகிறார். — தமிழாக்கம்: . சா. பெ.

(முன்தொடர்ச்சி)

சொந்த இல்லங்கள்....

அமெரிக்காவின் பெரியவர்த்தகர்களும், முதலாளிகளும் பாட்டாளி மக்களின் பரிதாபகரமான உழைப்பின் சிறப்பினால் கௌரவமாக, சொகுசாக, இடாம்பீகமாக வாழ்க்கையை நடாத்துகின்றனர்என அம்மாணவர்கள் எதிர்வாதம் புரிந்தனர். சோவியற்பிரசாரம் அவ்வளவுதூரம் அவர்களை ஆட்கொண்டுள்ளது. ஒருசில அமெரிக்கமுதலாளிகள் அரசாங்கத்தையும், பாமரமக்களையும் தங்களிஷ்டம்போல் நடத்திவருகின்றனரென அவ்விளைஞர்கள் கருதுகின்றனர். மஸ்கோவில் அண்மையில்நடைபெற்ற அமெரிக்கக்கண்காட்சியில் இடம்பெற்றிருந்த அமெரிக்கமாதிரி இல்லங்களைப்போல அமெரிக்காவில் சிலரே சொந்தமாக வைத்திருக்கமுடியுமென அவர்கள் எண்ணுகின்றனர். அமெரிக்கமக்களின் மோசமான வாழ்க்கைத்தரத்தில இவ்விதஇல்லங்களைச் சொந்தமாகக் கட்டியெழுப்ப இயலாதஎனக் கம்யூனிஸ்தபிரசாரம் அவர்கட்குப்போதித்துள்ளது. இது அமெரிக்கரின் ஏமாற்றுவித்தையென்று திரு. குருஷேவ்அவர்களே கூறியிருப்பதை ஆதாரம்காட்டினர் அம்மாணவர்கள்.

கட்டுப்பாடுகட்கு அமையும் மக்கள் கூட்டம்....

மஸ்கோ ஓர்இருளடைந்த நகரம். ஆம், இதுஎண்களங்கமற்ற மனப்பதிவு. செல்லுமிடங்களெங்கும் நட்புறவு கொள்ளமுடியாத முகங்களையே காணமுடிந்தது. மஸ்கோவின் சீதோஷ்ணநிலையே அவர்கள்மற்றையோருடன் பழகமுடியாமைக்குக் காரணமென நீவிர்ஆட்சேபிக்கலாம். ஆயின் கட்டுப்பாடுகட்கும், ஒழுங்குவிதிகட்கும் தங்களைஅடிமையாக்கியுள்ள மக்கள் எதிலும்சிரத்தையில்லாதிருப்பதே இதற்கு உண்மையானகாரணமென்றுயான்கருதுகின்றேன். தாங்கள்விரும்பியதைப் பேசவோ, செய்யவோ இயலாதவாறு அவர்கள் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதுடன் தாங்கள்செய்யவேண்டியவற்றை நிர்ணயிக்கும் உரிமைகளையும் தங்கட்குத் தெரியாதவாறே அவர்கள் கம்யூனிஸ்தகுழுவின் கரங்களில் ஒப்படைத்துள்ளார்கள்.

சாதாரணமாகக் கோதுமைஅப்பங்களை வாங்கச்செல்வதுமேகடுந்தொல்லைகளைக் கொண்டது. பால்த்திமோரிலுள்ள "கதிரவன்" பத்திரிகையின் மஸ்கோநிருபருடன் மஸ்கோவிலுள்ள அப்பத்தொழிலகம் ஒன்றுக்குச்சென்றேன். எனதுநண்பர்பேற்கும்பாசில அப்பங்களையும், கேக்பலகாரங்களையும், இனிப்புச்சுருள்களையும் வாங்கவிரும்பினர். அமெரிக்காவில் இதேபொருட்களுக்குக் குறிப்பிட்டுள்ள விலைகளிலும்பார்க்க இங்குஇவற்றின்விலைகள் அதிகமாகவிருந்தன. அத்துடன் அவற்றைக் கொள்வனவுசெய்யும் முறைகளும் சிரமத்தையளித்தன.

முதலில் கும்பாஅவர்கள்சென்று நிலையஉதவியாளரிடம் அப்பங்கள் தேவையெனக் கூறினர். அங்கு கும்பாவுக்கு ஒருதுண்டுகடிதம் கொடுக்கப்பட்டது. அதை அவர் பொருளாளரிடம் எடுத்துச்சென்றார். இங்குபணம் செலுத்தியபின் சீட்டுப்பெற்றுக் கொண்டு இன்னொருபகுதிக்குச் சென்று அங்கு அப்பங்களைவாங்கினர். பின்னர் இதேவழிகளில் கேக்பலகாரங்களை வாங்கினர். கடைசியாக இதேமுறையில் இனிப்புச்சுருள்களையும் பெற்றுக்கொண்டார். மஸ்கோவிலுள்ள வர்த்தகநிலையங்கள் அனைத்திலும் பொருள்களைக் கொள்வனவுசெய்ய இவ்வழியே பின்பற்றப்படுகின்றது.

சாதாரணமாகப் பாவிக்கப்படும் பொருள்கூடச் சோவியற்பிரசைகளின் வாழ்க்கைத்தரத்துக்கு அப்பாற்பட்ட விலையுள்ளனவாகக் காணப்பட்டன. தனக்குத்தேவையான உடைகளையும், வீட்டுத்தளபாடங்களையும் ரஷியன் ஒருவன் கொள்வனவுசெய்ய ஆசித்தால் அதற்குப் பலமாதங்களின் முன்பிருந்தே அவன் அதற்காயபணத்தைச் சேமித்துவைத்தல் அவசியம். சாதாரண மஸ்கோவாசி அதிகம்உண்பவுைக் காணப்படுகின்றான். உணவுப் பொருட்களின்விலை அதிகமாயிருப்பதால் ரஷியரின்வருமானத்தில் பெரும்பகுதி ஆகாரத்துக்காகச் செலவாகின்றது. ஆகவே, அவர்கள் சாதாரண அமெரிக்கபிரசைகள் அனுபவிக்கக்கூடிய பிறகளியாட்டங்களில் கூடப் பங்குபெற இயலாதவராகின்றனர்.

கட்சியின் அடக்குமுறை....

பொதுவுடமைத் தத்துவத்தின் உண்மைரூபத்தை அறியாதமக்களால் ஆட்சிப்பீடம் அக்காலத்தில் கம்யூனிஸ்தகட்சியிடம் திட்டவட்டமாக ஒப்படைக்கப்பட்டுவிட்டது. இரகசியப் பொலிஸ்படையினரையும், ஆயுதந்தாங்கிய இராணுவத்தினரையும் உதவிகொண்டு இன்றுஅதேகட்சி நடாத்தும் ஆட்சியை அது எப்படிப்பட்டதொன்றாயினும் அவர்களிடமிருந்து பறிக்கவோ அல்லதுஇக்கொடுமையினின்றும் தப்பியோடவோ இயலாதநிலையில் அங்காட்டுமக்கள் உளர். தனதுபிரசைகளின்வாழ்வின் ஒவ்வொருகோணங்களிலும் தனதுஅதிகாரங்களை அளவுக்குமிஞ்சிப் பிரயோகிக்கின்றது கம்யூனிஸ்தகட்சி.

உள்நாடுகளிலிருந்து மஸ்கோவுக்கு விஜயஞ்செய்யும் ஒவ்வொருபிரசையும் அனுமதிச்சீட்டுகளைத் தன்னுடன் வைத்திருத்தல்வேண்டும். அவ்விதமே ஒருமாகாணத்திலிருந்து அடுத்தமாகாணங்கட்குச் செல்லவிரும்புவோரும் அனுமதிபெறுதல்வேண்டும். மாகாணங்களின்நலனே முதலில் கருத்தில் கொண்டு தீர்மானங்கள் இயற்றப்படுகின்றன. அம்மாகாணங்களில்வதியும் மனிதரின்நலன்கள் இரண்டாவதாகவே கவனிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மஸ்கோவாசியினது உழைப்பும்,ஓய்வும் ஆட்சியாளரின்நலன்களை மேன்மேலும் திடப்படுத்தவே உதவுகின்றன. மஸ்கோவில் எவரும்பசியால் இறக்கமுடியாதென்பது உண்மைதான். ஆயின் அதிகாலம்வாழ்பவர்கள் மிகச் சொற்பமானோரே. கட்சியின்கட்டுப்பாடுகளில் அதிருப்தியடையும் முதி

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாள் அட்டவணை

ஆனி — 1960

ஞா. 26 பெந்தக்கோஸ்தின் பின் 3-ம் ஞாயிறு (அர்ச். அருளப்பர், சின்னப்பர் ஞா.) (வி. ம.) (ப)
திங். 27 காலதினம் (ஞாயிறுபூசை) (ப)
செ. 28 அர்ச். இறெனேயுஸ் அப்பர் (அர்ச். இராயப்பர், சின்னப்பர் ஆயத்தினம் ஞா.) (சி)
புத. 29 அப்போஸ்தலராகிய அர்ச். இராயப்பரும் சின்னப்பரும் (வி. ம.) (சி)
வி. 30 அர்ச். சின்னப்பரின் ஞாபகதினம் (அர்ச். இராயப்பர் ஞா.) (சி)

ஆடி — 1960

வெ. 1 யேசுநாதரின் விலைமதிக்கப்படாத திருஇரத்தத்தின் திருநாள் (வி. ம.) (சி)

சத்திய வேத
பாதுகாவலன்
1960-ம் ஆண்டு
ஆனிமாதம் 23-ந் திகதி

மருதமடுத் திருயாத்திரை

அகில இலங்கையிலுமுள்ள கத்தோலிக்கமக்கள் மாத்திரமல்ல, ஏனையமக்கள் பலருமே மருதமடுத்திருப்பதியை — அத்திருசேத்திரத்தின் நடுநாயகமாய் எழுந்தருளிப் பிரசாதவரு ஷஞ் செய்யும் கிருபாகரியான பரிசுத்த செபமாலைநாயகியைத் தங்கள் ஞானக்கண்களால் அதிகமாக ஏறெடுத்துநோக்கும் காலமாகிய ஆடிப்பெரிய மகோற்சவகாலம் அண்மூகின்றது. அல்லும் பகலும், சகலஆபத்து அவசியங்களிலும் தங்கள் இல்லங்களில் இருந்துகொண்டுதானே கையெடுத்து, "மடுமாதாவே" என்று உருக்கமாகஅழைத்து, உதவிசகாயங்களைச் சதாஇரந்துகொண்டுவரும் பக்தர்களெல்லாம் ஆவலுடன்எதிர்பார்த்திருக்கும் மகாயாத்திரைகாலம் அடுத்துவருகின்றது. கானகத்திடையே விளங்கும் அத்திருசேத்திரத்தின் வரநாயகமாய், அருள்நாயகமாய், ஆதரவற்றோரின் நம்பிக்கையாய், பிணியாளரின் பரமசஞ்சீவியாய்த் திரிலோகநாதனைத் தமது செங்கரத் தேந்தியவண்ணம் செம்பொற்சிம்மாசனத்தின்கண் ணேவீற்றிருக்கின்ற திருச்செபமாலைநாயகியின் அன்பையும், அருளையும், அணுக்கிரகத்தையும் அறியாதாருண்டா? அதனால் அப்பரம அன்னையாரின் திருப்பாதாரவிந்தங்களைநாடி, அவரின் சகாயத்தைத்தேடி, தயவைஇரந்துமன்றாடிச் சாகியபேதம், சமயபேதம் பாராது அவருடையதிருப்பதிக்கு யாத்திரைபோகும் மக்களின் வகைதொகைக்குக் கணக்குவழக்குண்டா? அங்ஙனம் யாத்திரைபோய் மாதாவைத் தரிசனஞ் செய்து அவருடைய கிருபாசனத்தின்முன் பக்திப்பரவசமுற்றவர்களாய் மக்கள்அளிததுநிற்கும் பரமானந்தகாட்சியைவருணிக்கநாவுமுண்டா? ஆம், பரிசுத்த செபமாலைநாயகி மருதமடுத்திருசேத்திரத்தில் மழைமாரியே எனப்பொழிந்துவருகின்ற அருள்மாரியை இந்த ஆடிப்பெரிய மகோற்சவம் இனிதேஎடுத்துக் காட்டுமன்றே! அங்கே மாதாவின்திருச்சந்நிதானத்தில் ஆனந்தக்கண்ணீர்சொரிவார் எத்தனைபேர்! மனஸ்தாபக்கண்ணீர் பொழிவார் எத்தனைபேர்! பெருமூச்செறிவார் எத்தனைபேர்! சுகம்பெறுவார் எத்தனைபேர்! கேட்டவரம்பெறுவார் எத்தனைபேர்! மனஆறுதலையும், சமாதானத்தையும் அடைந்துமகிழ்வார் எத்தனைபேர்! ஓ! மடுமாதாவே! கருணைகரியே! தயாநிதியே! பரலோகபூலோக அரசியே! பெற்றதாயினும் மிக்கபேரன்புடையாய்! கருணைபொழியும் உமதுவிழிகளை—புன்னகைபொழியும் திருமுகத்தைக் கண்ணுற்றபின்னரும் உம்மைநாடாதிருக்கமுடியுமா? உமதுஆதரவைத்தேடாதிருக்கமுடியுமா? உம்மிடம்இரந்துகேட்பது கைகூடாதிருக்க முடியுமா? ஓ! பரமஇராக்கினியே! பரிசுத்தசெபமாலைஅன்னையே! இந்தவேளை நாம் உம்மிடம்இரந்துகேட்கவேண்டிய உந்நதவரம் ஒன்றுள்ளது. அதனை உமதுபாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கின்றோம். தாயே! இன்று எமதுசெல்வநாடு இன, மத, மொழி வேறுபாடுமுதலாம் பலவித மாறுபாடுகளாலும் பிளவுபட்டு, ஒற்றுமைகெட்டு, அலைகடல்போன்று அமைதிகலைந்து, சீர்குலைந்து காட்சியளிக்கின்றது. எதிரேவரும் பொதுத்தேர்தலில்தான் எமதுநாட்டின் எதிர்காலவாழ்வும்தாழ்வும், எழுகையும்வீழுகையும் தங்கியிருக்கின்றன. அதனால் சகலர்க்குமே சமாதிவழங்கக்கூடிய—சமாதானத்தையும், சுபீட்சத்தையும் வளர்க்கக்கூடிய—நாட்டினைஎதிர்நோக்கியுள்ளசகலபிரச்சினைகளையும் தீர்த்துவைக்கக்கூடிய—நாட்டின்பொருளாதாரத்தைப் பெருக்கக்கூடிய— நாட்டிலே வகுப்புத்துவேஷம், மதத்துவேஷம், வகுப்புக்கலவரம் ஏற்படாது காத்துவைக்கக்கூடிய—நீதியிலே, நேர்மையிலே, ஆளுந்திறமையிலே தலைமைவகிக்கக்கூடிய ஒருஜனநாயகக்கட்சி பொதுத்தேர்தலில் பெரும்பான்மைப் பலத்துடன்வெற்றிபெற்றுச் சகலமக்களினதும் நல்லெண்ணத்தையும், பரஸ்பரநம்பிக்கையையும்பெற்று நல்லரசாட்சி நடத்தும்படியாக அருள்செய்தருளும். இங்நாட்டில்வாழும் இருபெரும்பான்மைச் சமூகத்தவர்களான சிங்களவர்களையும், தமிழர்களையும் இணைத்து, அவர்களிடையே பரஸ்பர ஒற்றுமையையும், நல்லெண்ணத்தையும், நிலைநாட்டவல்ல ஒற்றுமைப்பாலம்ஒன்றை உருவாக்கி இருபாலாரையும் ஒன்றுபடுத்திப் பண்டைய சகோதரத்துவசூழ்நிலையையும், மனப்பான்மையையும்வளர்க்க ஆவனசெய்தருளும். ஆட்டுத்தோலைப்போர்த்தஓநாய்களைப்போன்று நடமாடும் மாக்ஸியவாதிகள் கையிலிருந்து எம்மையும், எமதுநாட்டையும் பாதுகாத்தருளும். இந்தஆடிப்பெரிய மகோற்சவத்தின்போது உமதுதிருச்சந்நிதானத்தில் இனபேதம்,மதபேதமின்றியேஒருதாய்வயிற்றுப் பிள்ளைகளைப்போன்று சனசமுத்திரம்போலக் குழுமியிருந்து சமாதானமும், சகோதரபான்மையும், அமைதியும்நிலவ மக்கள் காட்சியளிப்பதுபோன்ற இலங்கையர் சமுதாயம் ஒன்றுநிலைபெற அணுக்கிரகம்செய்தருளும். அபயம்!

சுதேச வர்த்தமானம்

பொதுத்தேர்தலும் தவறணைகளும்

பொதுத்தேர்தலைமுன்னிட்டுவருகிற ஆடிமாதம் 19-ம், 20-ம், 21-ம் திகதிகளில் இலங்கையிலுள்ள எல்லாத்தவறணைகளும், பிறநாட்டுக் குடிவகைச் சாய்ப்புகளும் மூடப்படவிருக்கின்றன.

வான்மீது மோதியபஸ்

கேகாலையிலிருந்து சென்றவியாழக்கிழமைகொழும்பைநோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஒன்று தலவித்தாஎனுமிடத்திலே வான்ஒன்றுடனும், அதன்மேல் தெருவோரத்தில்நின்ற ஒருமரத்துடனும் மோதியகாரணமாக அதில்சென்ற 20பிரயாணிகள் காயமுற்றார்கள். இவர்களில் ஆறுபேர் கடுகாயமடைந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டார்கள்.

வடமத்தியமாகாண தளங்கள்

வடமத்திய மாகாணத்திலுள்ள பெரியகட்டுக்குளங்கள் அதிகம்துரிதமாக வற்றிக்கொண்டு வருகின்றன. அதனால்அங்கே கடும்வரட்சி உண்டாக்கூடியஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அம்மாகாணத்திலுள்ள பெரியகட்டுக்குளங்களான திஸவீவா,பசவாக்குளம், ஹுல்லுவீவா, பதவிக்குளம ஆகியன தினமும்இரண்டு அங்குலவீதம் வற்றிக்கொண்டுபோவதாய் நீர்ப்பாசனபகுதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எண்பதுலட்சம்ரூபா நஷ்டம்

இலங்கைப் போக்குவரத்துச்சபைக்குத் தேசியபஸ்சேவையினால் சென்ற 1959-ம்ஆண்டில் 80லட்சம்ரூபா நஷ்டம்ஏற்பட்டிருக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. பஸ்சேவை தேசியமயமான முதலாவதுவருடத்தில் ஏற்பட்ட நஷ்டத்தைக்காட்டிலும் இது இருமடங்காகும். கடந்தஇருவருடங்களிலும் பஸ்ஊழியர்களுக்கு அவ்வப்போது சம்பளம் உயர்த்தப்பட்டமையே இந்தநஷ்டத்திற்குக் காரணமாம்.

தேவநற்கருணைத் திருநாள்

நம்முடையஆசனக்கோவிலிலே தேவநற்கருணைத்திருநாள் சென்ற19-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை வழமைபோலப் பத்தியருட்சிக்குரியவிதமாய்க் கொண்டாடப்படலாயிற்று. அன்றுகாலை 7-15மணிக்கு வண. எஸ். பிரான்சீஸ் சுவாமியவர்களால் பாடற்பூசை நிறைவேறியது. சாயந்தரம்நம்மேற்றிராணியாண்டவர்அவர்கள் குருமார், குருத்துவமாணவர், பூசைப்பரிசாரகர் சமேதராய்க் கோவிலுக்கெழுந்தருளிப் பட்டணத்தின் பலபகுதிகளிலுமிருந்து பெருந்திரளான பாடசாலைப்பிள்ளைகளும், ஏனையவர்களுமாகப் பெருந்திரளானமக்கள் தேங்கியிருந்தசமூகத்தில் வேஸ்பர்பாடியதன்மேல் கதிர்ப்பாத்திரத்தைக் கரத்தேந்தித் திவ்வியசற்பிரசாதநாதரை ஆசாரபக்திவணக்கத்துடன்வீதியெழுந்தருளச்செய்தார். பக்தர்குழாங்கள் செபங்கள்ஓதிக்கொண்டும், தவ்வியகீதங்கள் பாடிக்கொண்டும், புஷ்பாஞ்சலி செய்துகொண்டும் அணிவகுத்துச்செல்ல, அழகுறச்சிங்காரிக்கப்பெற்றிருந்த வீதிகளினூடாகச் சற்பிரசாதநாதர் திருப்பவனிகொண்டார். சந்தியோகுமையோர் கோவில்முன்றிலில் அமைக்கப்பெற்றிருந்த அலங்கரித்தபீடத்தில் முதல்ஆசீர்வாதம் அருளப்பட்டது. பின்னர் சம்பத்திரிசியார்கல்லூரிப் பெரியவாயிலில் அமைக்கப்பெற்றிருந்த அலங்காரமான பீடத்தில் அருளப்பட்ட இரண்டாவது ஆசீர்வாதத்துடன் திருநாள் சம்பிரமமாக நிறைவாயிற்று. அதன்மேல் அங்குசமூகமானோரில் அநேகர் ஆசனக்கோவில் சென்று அங்குநிறைவேறிய மாலைப்பூசையையும்கண்டு தங்கள்இல்லங்களுக்குத் திரும்பினார்கள்.

முதல்நன்மையும் உறுதிப்பூசுதலும்

தேவநற்கருணைத் திருநாளாகிய சென்ற 16-ந்திகதி வியாழக்கிழமை காலை நம்மேற்றிராணியாண்டவர் அவர்கள் ஆசனக்கோவிலுக்கு எழுந்தருளித் திவ்வியபூசை நிறைவேற்றி அதிலே சுமார் 250பிள்ளைகளுக்கு முதல்நன்மையும், பூசைமுடிவில் 148 ஆண்பிள்ளைகளும் 152 பெண்பிள்ளைகளுமாக 300 பேருக்கு உறுதிப்பூசுதலும் அருளலாயினர். இத்திருவைபவங்களின்போது அவர்களின்பெற்றோரும், உறவினரும், அன்பர்களும், ஆசிரியர்களும், ஆசிரியைகளுமாகப் பெருந்திரளானோர்சமுகமளித்திருந்துபக்திப்பரவசத்துடன் திருவழிபாடுகளில் கலந்துகொண்டார்கள். அன்றுதினம் பெருந்திருநாளில்போன்று கோவிலும், அதனைச்சூழவுள்ள மைதானமும் காட்சியளிக்கலாயின.

செல்லாத வாக்குச்சீட்டுகள்

ஒவ்வொரு பொதுத்தேர்தலிலும் வாக்காளர்களின் கவலையீனத்தாலும், அலட்சியத்தினாலும், அறியாமையாலும் ஆயிரக்கணக்கான வாக்குச்சீட்டுகள் செல்லாது அவமாகின்றன. வாக்குச்சீட்டுகளிலே ஒன்றுக்குமேற்பட்ட அபேட்சகர்களுக்கு வாக்குகள் அளித்திருந்தால்—வாக்காளர்ஒருவர் தனது பெயரையோ அன்றேல்வேறெதையோ எழுதியிருந்தால் — சீட்டுகள்முத்திரையோ அன்றேல் அதிகாரபூர்வமான அடையாளமோ இல்லாதவைகளாயிருந்தால்— புள்ளடிபோடப்படாத சீட்டுகளாயிருந்தால் இந்தவாக்குச்சீட்டுகள் செல்லாதனவாகிக் கணக்கில் சேர்க்கப்படமாட்டாஎன்பதை வாக்காளர்கள் நன்கறிந்திருக்கவேண்டும்.

மருதமடுயாத்திரையும் மலிவுதிக்கற்றுகளும்

மருதமடுத்திருப்பதிசெல்லும் யாத்திரிகர்களுக்கு றெயில்வேப்பகுதி வழமைபோல மலிவுதிக்கற்றுகள் வழங்கவிருக்கின்றது மூன்றுமண்வகுப்பில் செல்லும் யாத்திரிகர்களுக்கு வழமைபோலப் போகவரஒற்றைச்சலாரிலும், அதிற்பாதியிலும் —அதாவது ஒன்றரைவிகித ஒற்றைச்சலாரிலும், கூட்டமாகச் செல்லும் யாத்திரிகர்களுக்கு எல்லாவகுப்புகளுக்கும் ஒன்றேகால்விகித ஒற்றைச்சலாரிலும் மலிவுதிக்கற்றுகள் வழங்கப்படவிருக்கின்றன. இவைகள் நிகழும் ஆனிமாதம் 23-ம்திகதிமுதல் வழங்கப்படும். பின்னர் 4-ம்திகதிவரை செல்லும். வழமைபோல விசேஷறெயின் வண்டிகளும், மடுரோட் றெயில்வேஸ்றேஷனிலிருந்துதிருப்பதிவரை தரிதபஸ்களும் ஓடவிடப்படும்.

இலவச பஸ்பிரயாணவசதி

அரசாங்கம் நாடெங்குமுள்ள மத்திய பாடசாலைகளைச்சேர்ந்த மாணவர்களுக்கும், பிரிவேனாக்களில் பயிலும்பிக்குகளுக்கும்மாத்திரமே இலவச பஸ்பிரயாணவசதி அளித்திருக்கையில் கொழும்புநகரசபையோ தனதுஎல்லைக்குள்அடங்கிய அரசினர்பாடசாலைகள், உதவிநன்கொடைபெறும் பாடசாலைகள், தனிப்பட்ட பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கும், பிரிவேனாக்களில்படிக்கும் மாணவர்களான புத்தபிக்குகளுக்கும் இலவசட்றொலிபஸ் பிரயாணவசதிஅளிக்கத் தீர்மானித்திருக்கிறது. சென்ற 15-ந்திகதி கூடிய கொழும்புநகரசபைக் கூட்டத்திலே இவ்வாறு தீர்மானிக்கப்படலாயிற்று. உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளைச்சேர்ந்த பிள்ளைகளுக்கும் அரசாங்கம் தனதுஇலவச பஸ்பிரயாணவசதியை விஸ்தரிக்கவேண்டுமென யோசனைகூறும் மற்றொருதீர்மானமும் அக்கூட்டத்தில் நிறைவேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாசகாயமாதா கோவில் பாவற்குளம்

காத்திரமிக்க விண்ணப்பம்

அன்பு மிகுந்த நண்பர்களே!

காணிப் பஞ்சத்தினாலும், வயிற்றுக்கொடுமையினாலும் நாம் பிறந்த நன்னாட்டைத் துறந்து குடியெழும்பிப் பாவற்குளப் புதுக்குடியேற்ற காணிகளிலே வசிப்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

எங்கள் குறைபாடுகள் அதிகமானவை. ஆனால், சிலவற்றையாகிலும் நிவர்த்திசெய்யும் பொருட்டு வளம்நிறைந்த நாடுகளில் வதியும் பெருமக்களாகிய உங்களிடம் உதவிகேட்க வந்துள்ளோம்.

மூதாதைகள் நமக்கு முதுசொமாகக் கொடுத்துவைத்த வேத விசுவாசத்தைக் கைவிடாது காப்பாற்றி வளர்க்கவும், வேத வழிபாடுகளை அந்திசந்தி நடத்தவும் நமக்குக் கோவில் ஒன்று தேவைப்படுகிறது.

பஞ்சத்தின் நிமித்தம் வளங்குறைந்த இவ்விடங்களில் வசிக்கும் எங்களிடம் போதிய வருவாயும் இல்லாதபடியால் உங்கள் தயவையும், பெருந்தன்மையையும் அதிகம் எதிர்பார்க்கிறோம்.

இதை வாசிக்கும் நண்பர்களே! சதாசகாய மாதாபேரால் தொடங்கியிருக்கும் இக்கோவிலை முற்றுப்பெறுவிக்க நமக்குப் பொருள் உதவியும், பண உதவியும் தந்து ஊக்கமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

உங்கள் உதவியை எதிர்பார்க்கும்

பாவற்குளக் கிறிஸ்தவர்கள்

Fr. John Singarayer,
Parish Priest,
Vauniya.

போர்மோஸாவின் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குத் தேவைப்படும் 9,00,000 டலரையும் இருவருடகாலத்தில் ஐக்கியஅமெரிக்கதேசத்தில் சேகரித்துக்கொடுக்கும் திட்டம் ஒன்றைப் போஸ்றன்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் குஷிங்ஆண்டவர் வகுத்திருக்கின்றார். புதிய சர்வகலாசாலை விஞ்ஞானம், மருத்துவம், விவசாயம், வர்த்தகம் ஆதியாம் எட்டுக் கல்வித்துறைகளுக்குமாக எட்டுக் கல்லூரிகளைக் கொண்டதாகும்.

* "மொன்சிஞ்ஞோர்" என்னும், திருச்சபைக்குச் செய்துள்ள சிறந்த சேவைகளைப் பாராட்டுமுகமாகப் பாப்பரசரால் குருமாரில் சிலருக்கு வழங்கப்படும் ஓர் மகிமைப் பட்டமாகும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

நகரசபையும் வாரச்சம்பளமும்

யாழ்ப்பாணநகரசபை ஊழியர்களுக்கு அடிக்கடி ஏற்பட்டுவரும் பணக்கஷ்டத்தைப் போக்குவதற்காக வாரந்தோறும் அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கு உடனடியான நடவடிக்கைஎடுக்க நகரசபை முடிவுசெய்துள்ளது. மேயர் திரு. ஏ. ரி. துரையப்பா அவர்கள் தலைமையில் நடைபெற்ற நகரசபைக்கூட்டத்திலே இந்தமுடிவு செய்யப்படலாயிற்று.

தேர்தல்பற்றிய எச்சரிக்கை

பொதுமக்களிடையே பரபரப்பை உண்டுபண்ணக்கூடிய பிரசுரங்களை எவராவது வெளியிடுகின்றனரா, அத்தகையபிரசுரங்களைப் பரப்புகிறவர்களென எவரெவர் சந்தேகிக்கப்படுகின்றனரோ அவர்களைக் கண்டுபிடிப்பதிலும், கண்காணிப்பதிலும் பொலிஸார் கருத்தாயிருந்து வருகின்றனர். பிரசுரங்களைப் பரப்பியோ, அன்றேல் பொய்வதந்திகளைப் பரப்பியோ மக்களிடையே அமைதியைக்குலைக்க எவராவது முயன்றால் அவர்கள்மீது கடும் நடபடிக்கை எடுக்கப்படுமென்று அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

ஆனிமாதம்

பொதுக்கருத்து: சகலகிறீஸ்தவர்களும் ஒரேவிசுவாசம் — ஒரே திருச்சபையிற்சேரத் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவரின் சலுகையை உருக்கமாக வேண்டமன்றாடிக் கொள்வது.

மிஷன்கருத்து: இன்னும் முன்னேற்றமடையாத நாடுகளுக்குக் கத்தோலிக்கர் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஆத்தும சரீர நன்மைகள் புரிய வேண்டிக்கொள்வது.

காலைக் காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பிடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிப்பிடப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

சுவிசேஷ வியாக்கியானக் குறிப்புகள்

— B. W. J. —

14. ஸ்நாபகரின் போதனை

(தொடர்ச்சி)

IV. முதலாளிமாருக்குப் போதனை

மத். III. 7-10; லூ. III. 7-9

(7) பரிசேயர் — மோயிசனுடைய சுத்திகரப் பிரமாணங்களை அற நுட்பமாய் அனுசரித்து, தாங்கள் மற்றவர்களிலும் பார்க்கப் புண்ணியவாளர் என்று பாசாங்குபண்ணிவந்த ஒரு யூதசமய பிரிவார். இவர்கள் பொதுவாக உத்தியோகத்தில் வேதபாரகராயும், அரசாங்க காரியத்தில் உரோமருக்கு எதிராயும் இருந்தார்கள்.

(8) சதுசேயர் — சர்வேசுரனுடைய தேவாதீனத்தையும், ஆத்துமத்தின் அழியாமையையும், மாமிச உத்தானத்தையும் மறுத்துவந்த ஒருயூதசமய பிரிவார். இவர்கள் பொதுவாக உத்தியோகத்தில் பிரதான குருக்களாயும், அரசாங்ககாரியத்தில் உரோமரோடு ஒற்றுமையாயும் இருந்தார்கள்.

(9) விரியன்பாம்புக் குட்டிகளே (மத். iii. 7; லூ. iii. 7) — மத்தேயுமாத்திரம் இவை பரிசேயருக்கும், சதுசேயருக்கும் சொன்ன வார்த்தைகள் என்று விபரமாகச் சொல்லுகிறார். அவர்கள் ஆங்காரமும், காய்மகாரமும் உள்ளவர்களானபடியால்தான் யேசுநாதரும் அவர்களை இப்படிக் கூப்பிட்டார் (மத். xxiii. 33). ஸ்நாபகர் அவர்களை நோக்கி: "உண்மையான உள்மனந்திரும்புதல் இல்லாமல் வெளிப் பாவசங்கீர்த்தனத்தினாலும், ஞானஸ்நானத்தினாலும் மாத்திரம் தேவகோபத்திற்குத் தப்பி இரட்சணியமடையலாம் என்று உங்களுக்குக் காட்டினவர் யார்?" என்கிறார்.

(10) ஆபிரகாமுக்குப் புத்திரர் (மத். iii. 9; லூ. iii. 8) — அதாவது, நீங்கள் இரத்தவழியால் ஆபிரகாமின் புத்திரராய் இருப்பதினால் இரட்சிக்கப்படமாட்டீர்கள். ஆபிரகாமின் விசுவாசத்தையும், நற்கிருத்தியங்களையும் கண்டுபாவிக்கிறவர்கள் யூதர் அல்லாவிட்டாலும், ஆபிரகாமின் ஞானப் புத்திரராய் வந்து இரட்சிக்கப்படுவார்கள். யேசுநாதரும் அவர்களுக்கு இப்படியே சொன்னார் (அரு. viii. 33, 39).

(11) வேரருகில் கோடரி (மத். iii. 10; லூ. iii. 9) — அதாவது பாவத்தில் நிலைகொள்ளுகிறவர்களை நரகத்திற்குஅனுப்பச் சருவேசுரன் ஆயத்தமாய் இருக்கிறார். பாவம் சிந்தனையினாலும், வாக்கினாலும், கிரிகையினாலும் மாத்திரமல்ல, நற்கனி கொடாததினாலும் அதாவது, கடமையைச் செய்யாமல் விடுவதினாலும் கட்டிக்கொள்ளலாம்.

V. வேறு மூன்று பகுதியாருக்கு — லூ. III. 10-14.

(12) ஆயக்காரர் சனங்களிடமிருந்து வரிப்பணம் வாங்கும் உத்தியோகத்தை உடையவர்கள். இவர்களுக்குள் சிலர் செய்துவந்த அநீதிகளின் நிமித்தம் இவர்களைச் சனங்கள் பகைத்தார்கள்.

VI. ஸ்நாபகரின் 1-ம் சாட்சி

மத். III. 11-12; மாற். I. 6b-8; லூ. III. 15-18.

(13) எனக்குப்பின் வருகிறவர் (மத். iii. 11; மாற். i. 7; லூ. iii. 16) — இது ஸ்நாபகர் யேசுநாதருக்கு ஞானஸ்நானம் கொடுக்குமுன் சொன்ன சாட்சி. ஸ்நாபகர் மெசியாவாய் இருக்கலாம் என்று சனங்களுக்குள் இருந்த யோசனையின் நிமித்தந்தான் அவர் இந்தச்சாட்சியைச் சொன்னார் என்ற விபரம் லூக்காவுக்கு விசேஷம்.

(14) என்னிலும் வல்லவர் (மத். iii. 11; மாற். i. 7; லூ. iii. 16) — ஸ்நாபகர் தம்மைத் தாழ்த்துகிறதற்கு மூன்று நியாயங்கள் கொடுக்கிறார்: 1-வது கிறீஸ்து தம்மிலும்பார்க்க வல்லவர். 2-வது கிறீஸ்து இஸ்பிரீத்துவினால் ஞானஸ்நானம் கொடுப்பார் (நட. i. 5). 3-வது கிறீஸ்து கோதுமையைத் தூற்றிப் பதர்களில்நின்று பிரிக்குமாப்போல, நடுத்தீர்வைநாளில் நல்லவர்களைக் கெட்டவர்களில்நின்று தெரிந்து பிரிப்பார். மாற்கு முதல்இரண்டு நியாயங்களை மாத்திரம் கொடுக்கிறார். இரண்டாம் நியாயத்திலே யேசு கொடுக்கும் ஞானஸ்நானத்திற்கும், ஸ்நாபகர் கொடுக்கும் ஞானஸ்நானத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசம் தங்கியிருக்கிறது. யேசுவின் ஞானஸ்நானம் மாத்திரம் இஸ்பிரீத்துவையும், அவருடைய பிரசாதத்தையும் ஆத்துமத்திற்குக் கொண்டுவருகிற கருவியாகிய உண்மையான ஒரு திருஅனுமானம்.

● விமானிஒருவர் உள்ளேயிருந்து செல்லக்கூடியதாய் அமெரிக்கா கட்டவிருக்கும் வானவெளிப் பயண விமானத்தின் பெயர் "டைனோஸோர்" என்பது. இதனைக் கட்டும் திட்டத்தை அமெரிக்க விமானப்படை அங்கிகரித்துள்ளது. வெப்பந்தாங்கும் திறன்படைத்த இந்தவிமானம் மணித்தியாலம் 18,000 மைல் வேகத்தில் வானவெளியில் செல்வதற்கேற்ற அமைப்புகளைக் கொண்டதாயிருக்கும்.

● ஜேர்மனியிலே கொலோன்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் யோசெவ் பிளிங்ஸ்ஆண்டவரின் குருத்துவ தங்கயூபிலி வருகிற ஆவணிமாதம் 10-ந் திகதி வருகின்றது. அப்போது தம்முடைய அதிமேற்றிராசன மக்கள் தமக்கு அன்பளிப்புகள் அனுப்புவதற்குப்பதில் ஆபிரிக்க மிஷன் நாடுகளுக்குச் செய்திகளை அஞ்சல்செய்யும் புதிய கருவி ஒன்றை அமைக்கும்படியாக வத்திக்கான் வானொலிக்கு உதவி செய்யுமாறு வேண்டியிருக்கின்றார்.

● ஐக்கியஅமெரிக்க மூன்ஹால்நகரிலே "உருக்குத்தொழிலாளரின் கோவில்" என்று பொதுவாக அறியப்படுகின்ற அர்ச். மிக்கேலின் கோவிலுக்குமேல் "உருக்குத்தொழிலாளி" அர்ச். சூசையப்பரின் இருபது அடி உயரமான சுரூபம் ஒன்று ஸ்தாபிக்கப்படவிருக்கிறது. இச்சுரூபம் முழுவதும் உருக்குக்கொண்டு பிரஞ்சு விக்றர் என்ற பேரான சிற்பியாலே செய்யப்படவிருக்கிறது.

● இத்தாலியிலே கீர்த்திவாய்ந்த ஐந்தாயவரத்தரும், கப்புச்சின் சபைக் குருவருமான வண. பியோ சுவாமியார் சென்றவருடம் அபாயகரமான நோய்கண்டு சீவாபத்தான நிலையில் இருந்தபோது பாததிமாநாயகியின் சலுகையாலே தாம் குணமடைந்ததாகத் தெரிவித்து, அதற்கு நன்றியாகப் பாத்திமா அன்னையின் திருச்சுரூபத்திற்கென்று ஓர் தங்கச் செபமாலை அனுப்பிவைத்திருக்கின்றார்.

● பிரான்ஸ் தேசத்திலே அதிகம் விருத்தாப்பிய குருவாய் இருந்துவருகிறவர் வண. ஜீன் அன்ரியோனே பிறிவாற் சுவாமியாரே. தற்போது இவருக்கு வயது 100. தாம் பருகிவந்த பானவகைகளே தமது நீடிய ஆயுளுக்குக் காரணமென்று இவர்கூறுகின்றார். இவர் மஸ்துள்ள பானங்களை அறவே விலக்கி வெள்ளாட்டுப்பாலும், ஊற்று நீருமே இதுகாலவரை அதிகமாகப் பருகிவந்திருக்கின்றார்.

● அர்ச். பாவிலுவானவர் (சின்னப்பர்) றோமாபுரி போய்ச்சேர்ந்த 19-ம் நூற்றாண்டுவிழாவைச் சகலவிதஆடம்பரவைபவங்களுடனும் அடுத்தநிகழும் 1961-ம் ஆண்டிலே கொண்டாடுமாறு றோமைநகரின் மதில்களுக்குவெளியேயுள்ள அர்ச். பாவிலுவானவர் மகாதேவாலயத்தின் மடாதிபரான டி' அமாற்றோ மேற்றிராணியாரை அருளப்பபாப்பரசர் கேட்டிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் பக்கம்

இளைஞரே! உங்களுக்கு ஓர் அழைப்பு



"என்பின்னே வா, இனிமேல் உன்னை மனிதரைப் பிடிப்போனாக்குவேன்"

(மாற்கு 1: 17).

வாலிபனே! யுவதியே!

✳ நீ வாழ்க்கையின் ஆரம்பப்படியில் நிற்கின்றாய்.

உன்முன் காட்சியளிக்கும் உலகம் உனக்கு அநேகபாதைகளைக் காட்டுகின்றது. உனது இளம் உள்ளம் இன்பம், புகழ்..... முதலியவற்றை நாடுகின்றது.

✳ நீ நிறைவேற்ற வேண்டிய தேவநியமனம் ஒன்று உண்டு.

அதை நீ பூர்த்தி செய்தால்தான் இன்பம் அடைவாய். தேவ அருள் ஒளியைப்பெற்ற அறிவைக்கொண்டே நீ அதைக் கண்டுபிடிக்கவேண்டும்.

✳ ஆனால், எல்லாம் உன்னிலேயே தங்கியிருக்கிறது.

இன்ப வாழ்க்கையை நீ ஆக்கவும் கூடும், அழிக்கவும்கூடும். உன்வாழ்க்கையைத் தகுந்தமுறையில் செலவிட விரும்புகிறாயா? உனது வல்லமைகளைச் சிறப்புற உபயோகப்படுத்திக் கொள்; ஓர் உயர்ந்த இலட்சியத்திற்கு உன்னை அர்ப்பணித்துக் கொள். நீ செய்யக்கூடிய யாதேனும் ஓர் நன்மை இருப்பின், அதை இப்பொழுதே செய்துவிடு. ஏனெனில், வேறொருவாழ்க்கை உனக்குக் கிடையாது.

✳ ஆகவே, உனது வருங்கால வாழ்க்கைதான் என்ன?

வைத்தியன், நியாயவாதி, எஞ்சினியர், எழுத்தாளன்.....? இவையாவும் உன்னதமான, மெச்சத்தக்க பதவிகள்தான். ஆனால், இவை எல்லாவற்றிற்கும் மேலானபதவி ஒன்று உண்டு. ..... உனது வாலிபத்தையும், சிவியத்தையும் தேவதொண்டிற்கு அர்ப்பணஞ்செய்யும் பாக்கியம்தான் அது.

✳ இதைப்பற்றி எப்போதாகிலும் நீ சிந்தித்ததுண்டா?

குருத்துவம் .. ... சந்நியாசசிவியம்

தேவ இராச்சியத்தை உனது சொந்தநாட்டில்பரப்புவதற்கு ஆர்வமுள்ள குருக்களுடனும், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகளுடனும் சேர்ந்துழைக்க விரும்புவாயா?

✳ ஆனால், ஒருகுரு அல்லது ஒரு கன்னியாஸ்திரி அவசியந்தானா?

மனிதர் பாவத்திலும், அழிவிலும் சிவிக்கின்றனர். அவர்களுக்குச் சமாதானம், இன்பம், இரட்சணியம் ஆகியவற்றிற்கு நற்பாதையைக் காட்ட ஒருசிலரே உளர். சிறுவர்க்கும், மனத்தரித்திரர்க்கும் தேவன் வெளிப்படுத்திய உண்மைகளை எடுத்தியம்பல், அவர்களுக்காகத் தன்னை முற்றும் அர்ப்பணித்தல், அவர்கள் சிவியத்தில் ஆனந்தத்தையும், நம்பிக்கையையும் அடையச்செய்தல் என்பன எத்துணை மகத்தான தொண்டுகள்என்று சிந்தித்துப்பார். கிறீஸ்துநாதருடைய அன்பால் அவர்களிருதயங்கள் நிரப்பப்படவேண்டும்.

✳ தேவன் உன்னை அழைக்கிறார்.

ஆம், உன்னைப்போன்ற வாலிபர்களை—பலரும், துணிவும்உள்ளவாலிபர்களை அழைக்கின்றார். ஏனெனில், கிறீஸ்துநாதருக்காகவும், ஆன்மாக்களுக்காகவும் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியிருக்கிறது. ஆர்வம்மிக்க அப்போஸ்தலர் ஆவதற்குப் பக்தியுடன் செபிக்கவும், உற்சாகத்துடன் படிக்கவும், செயலாற்றவும் நன்மனமுள்ள வாலிபரையே தேவன் அழைக்கின்றார். கடவுளுக்கு நீ தேவைப்படுகிறாய்!

✳ நானா?..... ஆம்! நிதான்!

இந்தநாட்டை மனந்திருப்ப நீ சொற்பமாகிலும் உதவிபுரியக்கூடும். கிறீஸ்துநாதரை நீ இலங்கைக்குக் கொடுக்கமுடியும்; இலங்கையை நீ கிறீஸ்துநாதருக்கு அளிக்கமுடியும். இதைச் செய்வதற்கு உனக்கு இப்போது தகுந்த வாய்ப்புஉண்டு. அது கைநெகிழ்ந்துபோக நீ விட்டுவிடாதே. கிறீஸ்துநாதரின் சமாதானத்தை நீ உலகிற்கு அளிக்கமுடியும். ஒரு ஆன்மா எத்துணை பெறுமதி உள்ளதென்பதை மக்கள் உணரச்செய்யமுடியும்.

✳ ஆனால், எனக்கு அழைத்தலுண்டா?

இக்கேள்வி நீ ஒருகுருவானவருடன் சம்பாஷிக்கும்போது அல்லது ஆறுதலாயிருந்து சிந்திக்கும்போது உன் மனதில் அடிக்கடி எழுகின்றது.

✳ அழைத்தல் தேவனின் ஒரு பெருங்கொடை

உன்னிடம்:

1. சாதாரண சுகம் (அதாவது, அங்கக்குறைபாடுகள் அல்லது மாற்றமுடியாத நோய்களில்லாத உடல்நிலை.)
2. போதிய விவேகம் (இத்துடன் பகுத்தறிவும், படிப்பில் விருப்பமும் வேண்டும்.)
3. நல்லொழுக்கம் (நேர்மை, அமைச்சல், புனிதம், தாராளகுணம் என்பன.)
4. உண்மையான விருப்பம்.

இவை இருப்பின், குருத்துவத்திற்கு அல்லது சந்நியாச சிவியத்திற்கு உனக்கு அழைத்தல் இருக்கக்கூடும். இதை நிச்சயப்படுத்த ஒருகுருவானவரிடம் அல்லது உனது ஆத்துமகுருவிடம் ஆலோசனைகேள். அவர் உனக்கு உதவிபுரிவார். தத்தளித்து நில்லாதே.

✳ மேற்படி அழைத்தலிரண்டும் உனக்கில்லையாயினும் இல்லற சாங்கோபாங்க அழைத்தல் உனக்கு உண்டே.

1. நீ விரும்பினால் உலகத்தின் நடுவில், உன் இல்லத்தில் சிவித்துக்கொண்டுதேவஊழியம் புரிவதற்கு ஏற்றதாய்க் கற்பு, அமைச்சல், தரித்திரமாகிய துறவற வாக்குத்தத்தங்கள்செய்து உன்னதபுனித சிவியம்நடத்த உனக்கு அழைத்தலுண்டு.
2. அல்லது, நீ சமுசாரியாயின் சமுசாரக் கடமைகளை முறையே அனுசரிப்போனாயும், அத்துடன் தேவஊழிய அலுவல்களில் ஈடுபட்டுப் பாடுபடுவோனாயும் இருக்க அழைத்தலுண்டு. இதுவே எவருக்கு முரிய கிறீஸ்தவ அழைத்தல்.

விபரங்கள் விரும்புவோர் பின்வரும் விலாசத்திற் கெழுதவும்.

வண. சுவாமியார்,
அப்போஸ்தோலிக்க பாடசாலை,
அர்ச். அன்னம்மாள் கோவில்,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

இயற்கையில் இறைவன்

செல்வி ஜீவா

வானத்தில் பூத்திடும் செங்கதிரில் —பல
கானத்தில் மலர்ந்திடும் வாசமலரில்
கண்டேனெடி இறைவனை — இனி
காசினியில் வேறெங்கு காண்பதெடி.

●

சோலையில் தோகை மயிலினிலே — அங்கு
காலையில் உலவிடும் வரிக்குயிலில்
கண்டேனெடி பரம்பொருளை — இனி
மேதினியில் வேறெங்கு காண்பதெடி.

●

கடலில், நதியில், ஆற்றினில் — புனல்
தெளிந்த பொய்கையில் குன்றத்திலே
தென்றலில் வண்டு பாடலில் — ஈசனை
மேதினியில் வேறெங்கு காண்பதெடி.

●

அல்லி, செவ்வந்தி மலர்களிலே — மாலை
மல்லிகை தந்திடும் வெண்ணகையில்
கானத்தில் சுற்றிடும் விலங்கினத்தில் — கண்டால்
மேதினியில் வேறெங்கு காண்பதெடி.

●

நாம்வாழும் இயற்கை எழில்முழுதும் — பொது
இறைவன் குடிகொண்ட குடிசையெடி
இன்னும் ஏதுக்கள் வேண்டுமோடி — உன்
இதயத்தில் நேசிக்க "இறைவனையே."

சீவியத்தின் எந்நிலையும் அதற்குரிய ஆபத்தைக் கொண்டுள்ளது. ஆயினும், வாலிபவயசுதான் ஒருவனை அதன்வலையிற் சிக்குண்ணப் பண்ணுவது. நற்குணங்களை மனதிற் பதிக்கும் வசந்தகாலம் இதுவே.

ரோசாப்பூவானது தனது நிறத்தையும், வாசனையையும் வேரிலிருந்து பெற்றுக் கொள்ளுகின்றது. மனிதனோ இளம்பருவத்திலிருந்தே தனது நற்குணங்களையும், புண்ணியங்களையும் பெற்றுக்கொள்ளுகிறான்.

- யார் தன் இச்சைகளை அடக்கி வாழ்கிறானோ, அவனே உலகை மேற்கொண்டவனாவான்.
  — அர்ச். சாமிநாதர்
- எல்லோருடனும் பொறுமையாய் நடந்துகொள். உன்னையிட்டோ அதிக கவனமாயிரு.
  — அர்ச். பிரான்சிஸ் சலேசியார்.
- பெரிய காரியங்களைச் செய்வதற்கே நான் பிறந்தேன்.
  —அர்ச். ஸ்ரனிஸ்லாஸ்

பின்வரும் உறுதிப்பத்திரத்தைச் சொந்தஎழுத்தால் திருப்பியெழுதி, நிரப்பி 'இளைஞர் பக்கம்', புனித அன்னம்மாள் கோவில், பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்புவோரின் நாமங்கள் இதற்குரிய இடாப்பில் பதியப்பெற்று, மிகவும் விரும்பத்தக்க முறையில் பிரயோகிக்கப்படும்.

உறுதி வாக்கு

[பெயர்] ..... ஆகிய நான், உத்தமனுஷ்ச சீவிக்க விரும்பிப் பண்ணும் வாக்கு.

1. என்னுலியன்றளவு திருச்சபையின் போதகங்களைக் கற்றுக் கொள்ள முயலுவேன்.
2. தாராளமான மனசுடன் அவற்றை அனுசரிப்பதில் வீரிய குணம் காண்பிப்பேன்.

இடம்: ..... ஒப்பம்: .....
பிறந்த திகதி: ..... ஞானஸ்நானத் திகதி: .....
முதல்கன்மைத் திகதி: ..... உறுதிபூசுதற் திகதி: .....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் பக்கம்

அன்புத் தம்பி, தங்கையரே!

தேவநற்கருணையில் யேசுநாதர் இருக்கிறார் என்பது விசுவாசசத்தியம். இதை நிரூபிக்கப் பல கதைகள் உண்டு. கட்டுக்கதைகள் அல்ல, உண்மைக் கதைகள். ஜெனெவா நகரத்தில் மனந்திரும்பிய யூதன் அந்நகர மேற்றிராணியாருக்குக் கூறிய உண்மைச் சம்பவம் ஒன்றைக் கீழே படியுங்கள். அதைப் படிக்கும் நீங்களும் பக்தியாகத் தேவநற்கருணை வாங்கவும், நற்கருணை நாதரை மேலும் அதிகமாக நேசிக்கவும் முயன்றுவாருங்கள்.

உங்கள் அன்புள்ள அண்ணு

நடந்தது உண்மை!

ஜெனெவா பட்டினத்தின் வைத்தியசாலையில் மனந்திரும்பிய யூதன் ஒருவன் இருந்தான். அவனுக்கு அந்திய தேவதிரவிய அனுமானங்கள் யாவும் அருளப்பட்டிருந்தது. அந்நகரமேற்றிராணியாரே அதைச் செய்திருந்தார்.

மறுநாள் அந்த நோயாளி மேற்றிராணியாரை அழைப்பித்துக் கூறியதாவது: "நான் இதுவரை ஒருவருக்கும் தெரிவியாத ஒரு சம்பவத்தை உங்களுக்குக் கூறுகிறேன்; எனது இளம் பராயத்தில் நடந்த சம்பவம் அது. நான் சர்வகலாசாலையில் படிக்கும் நாட்களில் எனது நண்பனுடன் உலாவப்போவது வழக்கம்; ஒருநாள் வழமைபோல உலாவிவரும் போது, 'மெசியா பிறந்துவிட்டாரா? இல்லையா?' என்ற சம்பாஷணை நடைபெற்றது; அப்போது வானத்திலே திடீரென ஒரு பிரகாசமான வெளிச்சம் தோன்றியது; அந்த வெளிச்சத்தின் மத்தியில் ஒரு பாத்திரமும், அதன்மேலாக வட்டவடிவமான அப்பமும் காணப்பட்டது; அதன்மேல் 'இங்கேதான் உங்களுடைய இரட்சணியம்' என்னும் குரலொலியும் கேட்டது; அன்றுதான் எனது சந்தேகம் தீர்ந்தது; உண்மையை உணர்ந்தேன்; மனந்திரும்பினேன்; அதுவே எனது இரட்சணியத்தின் காரணமாயிற்று; கிறீஸ்தவர்கள் விசுவசிக்கிற தேவநற்கருணையின் பரம இரகசியம் எனக்கும் தெளிவாகியது" என்று அவன் கூறினான்.

இது ஒரு உண்மைச் சம்பவம். இதைக் கூறிய ஜெனெவா நகர மேற்றிராணியார் ஒரு அர்ச்சியசிட்டர். அர்ச். தோமாஸ் மேற்றிராணியார் தமக்கு அந்த யூதனுற் கூறப்பட்ட சம்பவத்தையே திரும்பவும் கூறியிருக்கிறார்.

இது பழைய ஒரு கதை. ஆனால், புது மெருகுடன் எழுதப்பட்டிருக்கிறது. படித்துப்பாருங்கள்.

நரியின் தந்திரம்

ஒருகாட்டில் ஓர் அசட்டுநரி தன் மனைவி மக்களுடன் சந்தோஷமாக வாழ்ந்துவந்தது. ஓர்நாள் அந்தநரி குளிக்கும்போது சந்தோஷம் தாங்க மாட்டாமல் ஊளையிட ஆரம்பித்தது. இதைக்கேட்ட அந்தநரியின் மனைவிக்கு மிகுந்தகோபம் உண்டாயிற்று. குளிக்கிற அறையைச் சாத்திக்கொண்டு மனிதர்கள்போல் ஏன் ஊளையிடுகிறாய்? இன்று உனக்குச் சாப்பாடுகிடையாது, வெளியேபோ என்று விரட்டிவிட்டது.

நரி மிகுந்த விசனத்துடன் காடு, மேடு, பள்ளம், குளம், குட்டையாவற்றையும் தாண்டி நடக்கத் தொடங்கியது. கடைசியாக ஒரு கிராமத்துக்கு வந்து சேர்ந்தது. அங்கே ஒரு மரத்தடியில் ஒருபாட்டி வடை சுட்டுக்கொண்டிருந்ததைக் கண்டது. வடையின் வாசனையால் நரியின் வாயில் சலம் ஊறியது. வடையை எப்படிக் கேட்பதுஎன்று விளங்காத அசட்டு நரி தன் மனைவியிடம் அதிகாரம் பண்ணுவதுபோல் அதிகாரம் தொனிக்கும் குரலில் பாட்டியைநோக்கி: "ஏ கிழவி! ஒரே பசியாய் இருக்கிறது; எனக்கு ஒரு வடை கொடு" என்றது.

பாட்டியம்மாளோ அக்கிராமத்தவர்கள் எல்லோரும் 'பாட்டி' என்று தான் அன்பாக அழைத்தனர். நரி கிழவி என்று கூப்பிட்டது அவளுக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கிவிட்டது. "என்னையா கிழவி என்றாய்? உன்னை விட்டேனு பார்; உன்முகத்தில் கொதிக்கும் எண்ணெயைக் கொட்டுகிறேன் பார்" என்று ஒரு கரண்டியில் கொதிக்கும் எண்ணெயை எடுத்துக்கொண்டு நரியைத் துரத்தினாள்.

அதற்குள் அப்பாதையால்போன நாலைந்து பேர் பாட்டியம்மாளைத் தடுத்து எண்ணெய் விற்கிறவிலைக்கு நரிமேலே வீணாகக் கொட்டுவானேன்? பாட்டியம்மா, சாதாரண வெந்நீரைக் கொட்டினால் போதும்" என்று சமாதானம் கூறினர். நரி தானே கிழவி என்றது; அந்த நரி நாசமாய்ப்போக! என்று திட்டிக்கொண்டு தன் வியாபாரத்தைக் கவனிக்கலானாள்.

இப்படியிருக்க அதே இடத்திற்கு ஒரு காகமும் வந்து சேர்ந்தது. பாட்டியம்மாள் நரியைத் துரத்திய கோபால் மூச்சுவாங்க உட்கார்ந்து கொண்டிருப்பதைக் கண்டு அதற்கு இரக்கம் ஏற்பட்டது. பாட்டியை நோக்கி: பெரியம்மா, ரொம்பவும் கோபாய் இருக்கிறீர்களே; உங்களுக்கு எனது உதவி ஏதாகிலும் தேவையா? என் பெயர் சமூகத் தொண்டன்; பிறருக்கு உதவி செய்வது என்தொழில்" என்றது

பாட்டியம்மா காக்கையின் வார்த்தையைக்கேட்டு அகமகிழ்ந்து "உன்னுடைய அன்பான வார்த்தைகள் ஆயிரம் வடை பெறுமே; எனக்கு நீ ஓர் உதவியும் செய்யவேண்டாம்; இந்தா, உனக்கு ஒரு வடை இனாமாக" என்று அன்புடன் கொடுத்தாள்.

நடந்த சமாச்சாரங்களை எல்லாம் ஒரு புதரின் மறைவில் இருந்து அசட்டு நரி பார்த்துக்கொண்டே இருந்தது. ஆஹா! நாம் மிரட்டி அதட்டிச் செய்ய முடியாத காரியத்தை நாலு வார்த்தைகளில் இந்தக் காகம் சாதித்துக்கொண்டதே என்றுஎண்ணி, இனி நாமும் இந்தக் காக்கையின் வழியைக் கடைப்பிடித்து நடப்பது என்று உறுதி பூண்டது. இவ்வாறுகப் புதுவாழ்வு பெற்ற அந்த அசட்டு நரி தன் புதுமையை அந்தக் காகத்திடமே ஏன் பிரயோகித்துப் பார்க்கக்கூடாது? என்றுஎண்ணியது. அடுத்தகணமே குடுகுடுவென்று காகம் வடையுடன் உட்கார்ந்திருந்த மரத்தினடியில் சென்று, "காக்கைஅண்ணு, காக்கை அண்ணு!" எனத் தேனொழுகும் குரலில் காகத்தை அழைத்தது.

இதைக்கேட்ட காகம் கீழே குனிந்து பார்த்தது. உடனே நரி, "நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய்; உன்னிடம் இருந்து ஓர் நறுமணம் வீசுகின்றதே; நீ உன் உடம்பில் என்ன வாசனைத்தைலம் பூசுகிறாய்? தலைக்கு என்ன எண்ணெய் தடவுகிறாய்? உன் உடம்பு பளபளவென மின்னுகிறதே" என்று புகழ்ந்து கேட்டது. இதுகேட்ட காக்கையா[illegible]ளவில்லை. தனது

கண்டுபிடியுங்கள்

மூன்று எழுத்துக்களைக் கொண்ட ஒரு ஊரின் பெயர்.

முதல்எழுத்தை எடுத்துவிட்டால் ஒருவரின் பெயர்.

இரண்டாவது எழுத்தை எடுத்துவிட்டால் ஒரு காட்டு மிருகத்தின் பெயர்.

மூன்றுவது எழுத்தை எடுத்துவிட்டால் ஒரு மயக்கம் தரும் பானம் என்று கருத்துப்படும்.

அவ்வூரின் பெயர் என்ன?

— ஏ. ரோகினி, மன்னர்

உங்களுக்குத் தெரியுமா? By Scio



வானவெளிக் கப்பல் ஒன்று பூமியின் சூழலிலிருந்து தப்பிக்கொள்ளுமாறு குறைந்தபட்சம் மணித்தியாலம் ஒன்றுக்கு 24,688 மைல் வீதம் பிரயாணஞ்செய்யவேண்டும். அங்ஙனம் ஓர் கப்பல் பிரயாணஞ்செய்து தப்பிக்கொள்ளுமிடத்து, அதன் வேகம் மணித்தியாலம் ஒன்றுக்கு 4,000 மைலுக்கும், 5,000 மைலுக்கு மிடையிலே குறைந்துகொண்டு போகின்றது. இந்த விகிதமாய்ப் பிரயாணஞ் செய்யுமிடத்து ஒரு வானவெளிக் கப்பல் சந்திரனைப் போய்ச்சேர 50 மணித்தியாலமும், செவ்வாய்க்கிரகத்தைப்போய்ச்சேர 290 நாளும், சுக்கிரனைப்போய்ச்சேர 215 நாளும் செல்லும்.

இறக்கைகளை ஒருமுறை உதறிக் கொசுவிக்கொண்டு கெம்பிரமாக இருந்தது. இதைக் கண்ட நரி,

"காக்கைச் சிறகினிலே நந்தலாலா
உந்தன் கரியநிறம் தோணுதடா
நந்தலாலா"

என்று பாடியது.

இதைக்கேட்ட காக்கைக்குக் கர்வத்தால் தலைக்கனம் அதிகரித்தது. நரியின் புகழ் மொழிகளைக் கேட்டுக் குசி தாங்க முடியாமல் தனக்குப் பழக்கமான "கா...கா..." என்றபாட்டைப் பாடியது. அடுத்த கணமே வடை கீழே விழுந்தது. நரி வடையைத் தூக்கிக்கொண்டு சந்தோஷமாய்த் தன் வீட்டுக்கு ஓடிவந்து தன் மனைவியிடம் தான்செய்த திறமைவாய்ந்த தந்திரத்தைச் சொல்லி, அதன் பலனுகத்தான் இந்த வடை கிடைத்தது என்றுகூறி வடையைப் பாதியாக்கி மனைவிக்கும் கொடுத்து தானும் சாப்பிட்டு மகிழ்ந்தது.

தம்பி தங்கையரே!

உங்களிற் பலர் "பாலர்பக்க அங்கத்தின"ராகச் சேர்த்துக்கொள்ளும் படி நெடுநாளாகக் கேட்டுவந்திருக்கிறீர்கள். உங்கள் ஆவலைப் பூர்த்திசெய்யத் தக்கதாக அங்கத்துவ மனுப்பத்திரம் ஒவ்வொரு வாரமும் பிரசுரிக்கப்படும். ஒருவர் குறைந்தது 3 கூப்பன்களாவது நிரப்பி அனுப்பவேண்டும். 3 கூப்பன்களும் ஒரே கவரில் வைத்து அனுப்பப்படவேண்டும்.

நிகழும் ஆனிமாதம் 1-ந் திகதி (1–6–60) யில் 15 வயதா யிருப்பவர்களும், அதற்கு உட்பட்டவர்களும் மாத்திரமே இதில் அங்கத்தவராகச் சேரலாம். அவர்களுக்கு அடையாள இலக்கங்கள் கொடுக்கப்படும். கட்டுரை, கதைகள் எழுதும்பொழுது அந்த இலக்கம் குறிக்கப்படவேண்டும்.

பாலர் பக்கம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

பெயர்:.....

ஆண் / பெண்:.....

பிறந்த திகதி:.....

வகுப்பு:.....

பாடசாலை:.....

விட்டு விலாசம்:.....

விசாரணைப்பங்கு:.....

முதல் நன்மை பெற்ற திகதி:.....

உறுதிப்பூசுதல் பெற்ற திகதி:.....

விண்ணப்பப்பத்திரம் அனுப்புவோர் மூன்று விண்ணப்பப் பத்திரங்களையும் ஒன்றாக வைத்து அனுப்பவேண்டும். தனித்தனி அனுப்புவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல. M. B. 2524

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

1. காரைதீவு கிழக்கு, வீரகத்தி கதிரவேற்பிள்ளை
2. ஷெயூர் பெண் சிவகாமிப்பிள்ளை — வழக்காளிகள்.

எதிராக

1. காரைதீவு மேற்கு, சுப்பிரமணியம் முத்தையாபிள்ளை
2. ஷெயூர் பெண் மகேஸ்வரியம்மா — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 2524-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல்விபரிக்கப்படும் ஐந்து ஆண்டுக்காணிகள் 1960-ம்ஹ்ரு ஆடிமீ 23-ங்வ சனிக்கிழமை முற்பகல் ஒன்பதுமணிதொடக்கம் அந்தந் தக் காணிக்குள்நின்று பிரசித்தஎலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி 11,497 ரூபா 61சதமும், ரூபா 10,000-க்கு 30-10-58 தொடக்கம், 27-7-59 வரைக்கும் 5வீதமானவட்டியும், அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதமானவட்டியும், கோட்டுச்செலவு 561ரூபா 72சத மும். கோட்டுச்செலவில் ரூபா 175கொடுபட்டது.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக்கோயிற் பற்று, தங்கோடையிறை "தச்சன்வயல்" பர. கெ. இலா. பதினேந்து (ப. கெ. இ. 15). எல்லை: கிழக்கு — வேலுப்பிள்ளை கைம்பெண் செல்லமுத்துவுக்குரிய ஆதனம். வடக்கு — சிவகுருநாதர் கணேசபிள்ளைக்கும், சகோதரனுக்கும், முருகேசு பெண் மீனாட்சிப்பிள்ளைக்கும், சிதம்பரப்பிள்ளை சங்கரப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் உரியஆதனங்கள். மேற்கு — முருகேசு கைம்பெண் தெய்வானைப்பிள்ளைக்குரிய ஆதனம். தெற்கு — கந்தப்பு வைத்திலிங்கத்துக்குரிய ஆதனம். இதடங்கலிலும் சொரியலாய்ப்$\frac{13}{14}$ பாகம். இதன்பதிவு C 248|103லிருந்து C 309|178-க்குப் போயிருக்கிறது.

2. ஷெயிறை "ஒயிலைப்புலம்" பர. நில இலா. ஐந்தும், (ப. நி. இ. 5) பனைகள், வடலிகள், வேம்புகள், வீடிகளும். எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு — தம்பையா பெண் சுந்தரத்திற்குரிய ஆதனம். மேற்கு — அம்பலவாணர் தம்பிராசாவிற்குரிய ஆதனமும், ஒழுங்கையும். தெற்கு — சுப்பிரமணியம் செல்லையாவிற்குரிய ஆதனம். இதடங்கலும். இதன்பதிவு C 185|119.

3. ஷெயிறை "உஞ்சியாட்டி" பர. நில. இலா. பதினேந்தரையும், (ப. நி. இ. 15$\frac{1}{2}$) பனைகளும், வடலிகளும். எல்லை: கிழக்கும், தெற்கும் — இராமலிங்கர் அம்பலவாணருக்குரிய ஆதனம். வடக்கு — வேலுப்பிள்ளை அருளம்பலத்திற்கும், மறுபேருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு — ஆறுமுகம் சங்கரப்பிள்ளைக்கும், பங் காளர்கட்குமுரிய ஆதனம். இதடங்கலும். இதன்பதிவு C 243|92.

4. ஷெயிறை "தில்லைவயல்" பர. நில. இலா. பத்தும், (ப. நி. இ. 10) வீடுகளும், பயிர்வகைகளும், கிணறும். எல்லை: கிழக்கு — வாய்க்கால். வடக்கு — கதிர்காமர் ஆறுமுகத்தின் உரிமைக்காரர்கட்குரிய ஆதனம். மேற்கு — மேட்டு. தெற்கு — கதிர்காமர் ஆறுமுகத்தின் உரிமைக்காரருக்கும், மறுபேர்கட்குமுரிய ஆதனங்கள். இதடங்கலிற் சொரியலாய் $\frac{13}{14}$பாகம். இதன்பதிவு C 298|187.

5. ஷெயிறை "காத்தங்காவயலும், தெடுங்குளமும்" பர. கெ. இலா. பத்து. (ப. கெ. இ. 10) எல்லை: கிழக்கு — சிவகுரு வேலுப்பிள்ளைக்குரிய ஆதனம். வடக்கு — நாகமுத்து கதிரவேலுவிற்கும், முருகேசு பொன்னையாவிற்குமுரிய ஆதனங்கள். மேற்கு — கணபதிப்பிள்ளை பெண் தெய்வானையின் உரிமைக்காரர்கட்கும், சிதம்பரப் பிள்ளை நவரத்தினத்திற்குமுரிய ஆதனங்கள். கெற்கு — மயில்வாகனம் பெண் சோதிக்குரிய ஆதனம். இதடங்கலும். இதன்பதிவு C 298|188.

வை. ஏரம்பமூர்த்தி,
கொமிஷனர்.

காரைநகர், 1960-ம்ஹ்ரு, வைகாசிமீ, 30-ந்திகதி.

4-ம்வருட மரணஞாபகம்

பிறப்பு
8-11-1904

இறப்பு
27-6-1956

எனது நேசமனைவியும், எங்கள் அருமைத் தாயாருமாகிய **மரியம்மா பொன்னையா** இவ்வுலகை விட்டுநீங்கிய 4-ம்வருட நிறைவுதினம் 27-6-60 திங்கட்கிழமை பூர்த்தியாகிறது. அன்றுதினம் யாழ்ப்பாணம், அர்ச். ஸ்நாபகயுவானியார் கோவிலில் காலை 5-30மணிக்கு ஒர்திக்கப்பாடற்பூசை நிறைவேறும். ஆகவே, இதைக்கண்ணுறும் கிறீஸ்தவர்கள் இவருடையஆன்மா சாந்தியடைய இறைவனிடம் மன்றாடும்படி வேண்டுகிறோம்.

"சுவாமி, இவருக்கு முடிவில்லாத காலத்தின் பேரின்பசுகத்தைக் கட்டளை யிட்டருளும்; நித்தியகாலத்தின் பிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக்கடவது. சமாதானத்தில் இளைப்பாறுவாராக, ஆமென்.

இவலைப்பிரிந்து தியருறும்: **பிரியபத்தாவும், பிள்ளைகளும்.**

446, ஆஸ்பத்திரிரோட்,
யாழ்ப்பாணம்.

தேவை

கோவில்வேலைகளைக் கவனிக்கவும், உப தேசியாராகக் கடமையாற்றவும், ஆர் மோனியம்வாசிக்கத் தெரிந்தவருமான ஒரு கத்தோலிக்கர் தேவை. தமிழ், சிங்கள ளத்தில் தேர்ச்சியுடையவர் விரும்பத்தக் கது. தங்கள் பகுதிக்குருவானவரின் நற் சாட்சிப் பத்திரத்துடன் உடனே பின் வரும் முகவரிக்கு மனுச்செய்க.

வண. கட்டளைக்குரவர்,
அர்ச் சூசையப்பர்கோவில்,
தண்ணுமுனை, செங்கலடி.

கிளை ஆபீஸ்

முறிவு, நோவுகளுக்குச் சிறந்த சிகிச்சை

ஒட்டகப்புலம், வைத்தியர்

ஏ. எம். பொன்னையா சமத்தர்,

எல். ஐ. எம். மதராஸ்.
வைத்திய நிலயம்

ஏ. எம். பி. எஸ்
மருந்துச்சாலை,

● **23/2, ஸ்ரான்லிவிதி, யாழ்ப்பாணம்.**

பிறஇடங்களுக்கு
நோவு, முறிவுகளுக்காகிய
மருந்துகள், எண்ணெய்கள்
தபால்மூலம் அனுப்பப்படும்.

● ஞாயிற்றுக்கிழமைதவிர
மற்றும்நாட்களில் திறந்திருக்கும்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1730

வண்ணார்பண்ணை, கிழக்கு
நாகராசா பரமநாதன்
— வழக்காளி.

எதிராக

மிருசுவில்

1. பென்சமின் ஜேம்ஸ் கறேல்ட் பொன்ராசு
2. மனைவி மேரிமாற்றில்டா, பொன்மணி இருவரும்.

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 1730-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி. பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1960-ம்ஹ்ரு ஆவணிமீ 3-ம்வ புதன்கிழமை பிற்பகல் 2 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா3310-உம், இன்னும்ரூபா3000-க்கும் 3-7-1957 தொடக்கம் 27-1-1958 வரை 12% வட்டியும், அதன்பின் கூடிய முழுத் தொகைக்கும் 5% வட்டி கொடுக்கும் வரையும் இறுக்கவேண்டும்.

காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் மிருசுவில் கோவில்பற்று, எழுதுமட்டுவாள், தென்மராட்சிஇறை "செம்பாடு" என்னும்காணி நிலப்பரப்பு 37. எல்லை: கிழக்கு— ம. அல்பிறெட்டுடைய ஆதனம். வடக்கு—க. காத்தியேசு, ம. அல்பிறெட் அன் பிறதேஸ், அன் சிஸ்ரேஸ் உடைய ஆதனம். மேற்கு—ஒழுங்கை. தெற்கு —ஒழுங்கை. பதிவு இலக்கம் F. $\frac{289}{182}$.

ஆர். கனகரத்தினம்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 35, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

நன்றித் துதி

பரிசுத்தசதாசகாயமாதாவின்இரக்கத்தினால் எனக்கு வியாதியினின்று பூரணசுகமும், தொழிலும் கிடைத்தது அவவின் மகிமைக்காக நேர்த்திப்படி இதைப்பிரசுரிக்கிறேன். எம். சலமன்.
உடுவில்.

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை மாதாந்தக்கூட்டம் அடுத்திவரும் 25-ம் திகதி சனிவாரம் பி. ப 4மணியளவில் அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். அவ்வமயம் சகோதரிகள் தங்கள் நவப்பியாசத்தை முடித்து, வார்த்தைப்பாடு எடுக்கவிருப்பதால் எல்லோரும் தமது உடைகளை அணியும்படி சபைகாத்திருக்கின்றது. பகுதித்தலைவர் கள்சங்கம் இதன்பின் நடைபெறும். எல்லோரும்தப்பாது நேரகாலத்தோடு சமுகந்தரும்படி தயவாய் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
A. S. Francis OF Mary,
சபைக்கர்த்தருக்காக.

பேரான திருச்சுரூபம்

ரோமாபுரி, அர்ச். பேதுருவானவரின் மகாதேவாலயத்தில் இருந்துவருகின்ற அர்ச். பேதுருவானவர் திருச்சுரூபத்தின் வலதுபாதம் இலட்சக்கணக்கான யாத்திரிகர்கள் தங்களது உதடுகள்கொண்டு முத்தமிட்டகாரணமாக அதிகம் தேய்ந்துபோயுள்ளது. ஆனால், இந்தச்சுரூபம் பெரும்பாலான மக்கள் எண்ணுவதுபோல அத்தனை பழையதல்லவென்று ரோமைச்சர்வகலாசாலைப்பேராசிரியர் மரியோ சால்மி அவர்கள் கூறுகின்றார். இச்சுரூபம் புராதன ரோமையர்காலத்தில் செய்யப்பட்டதென்று சிலர்நம்பிக் கிறீஸ்தவ பாவனைக்கு அதனைப் பொருத்தப்பண்ணினர்; ஆனால், இதுசெய்யப்பட்டுள்ள லோகக்கலப்புகளை ஆராய்ச்சிசெய்தபோது 13-ம்நூற்றாண்டில் செய்யப்பட்டதுஎன்பது தெளிவாகிறது; 4-வது பொனிப்பாஸ் பாப்பானவரின் சிற்றாலயத்தையும், 8-வதுபொனிப்பாஸ் பாப்பானவரின் கல்லறையையும் நிர்மாணித்த ஆனல்போடி காம்பியோ என்ற புளோரென்ஸ்கர சிற்பியின் கைவேலைப்பாடாகவே அநேகமாய் இதுகாணப்படுகின்றது; இதனைச்செய்வதிலே 80சதவீதம் செமபும், ஏறக்குறைய 20சதவீதம் தகரமும் கலக்கப்பட்டிருக்கிறது; இக்கக்கலவை 13-ம் நூற்றாண்டின் இறுதியிலே பாவனையில் இருந்ததென்று முன்சொன்ன போராசிரியர் தெரிவித்திருக்கின்றார்.

● கடிதங்களிலும், பார்சல்களிலும் ஒட்டிப் பாவிக்கப்பட்ட முத்திரைகள் மிஷனரிமாருக்குப் பணமாக உதவுகின்றன. பிரித்தானியாவிலே ஒக்ஸன் நகரிலுள்ள ஹெதிறொப் கல்லூரியிலுள்ள மிஷன் முத்திரைக் கருமசாலையானது கடந்த இருவருடங்களிலும் பிரித்தானியதேசத்தின் ஒவ்வோர் பகுதியிலுமிருந்து சேகரித்து அனுப்பப்பட்ட பாவித்த முத்திரைகள்கொண்டு 1,500 பவுண் சம்பாதித்திருக்கிறது.

● சோவியற்ரூஷியாவாலே ஆக்கிரமிக்கப்பட்ட பால்திக்காடுகளில் ஒன்றான லிதுவானியாவில் கோனஸ் எனுமிடத்தின் பங்குக்குரவரான வண. நிக்கொலாஸ் ஜிலிஸ் சுவாமியார் "சட்டவிரோதமாய்ப் பிள்ளைகளுக்குச் சமயத்தைப் படிப்பித்தா"என்ற குற்றச்சாட்டின்பேரில் ஒன்பதுமாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றார்.

● "கான்ஸர்" என அறியப்படுகின்ற புற்றுநோய்க்குப் புதியசிகிச்சைமுறை ஒன்று தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகச் சிக்காகோ நகரிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. அமெரிக்க அணுச்சக்திக் கம்மிஷன் கடத்திய ஆராய்ச்சியின் விளைவாக அணுச்சக்தி மூலம் புற்றுநோயைக் குணப்படுத்தும் யந்திரசாதனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 23-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org